யாழ். பல்கலைக்கழக முதலாம்வருட ஊடகக் கற்கைகள் மாணவர்களின் இளையோர் சிறப்பிதழ்


2015

# பல்கலையன்

LIBRARIAN'S OFFICE
RECEIVED
-5 FEB 2016

Email:editorpalkalaiyan2015@gmail.com
fb: Jaffna Palkalaiyan

இதழ் : 05 பக்கங்கள் : 20 விலை : 100/=



UNIVERSITY OF JAFFNA
LIBRARY
12 FEB 2016
PERIODICALS DIVISION

பிறப்பு சம்பவமாக இருக்கலாம் - ஆனால்
இறப்பு சரித்திரமாக இருக்க வேண்டும்

- டாக்டர் அ.ப.ஜ. அப்துல் கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 பல்கலையன்

## இது நெருடலான காலகட்டம்

**அநீதியான சூழலில் நடுநிலை வகிப்பதென்றால் நீங்கள் அநீதியாளர்கள் பக்கம் செல்கிறீர்கள்.**

**டெஸ்மன் டு**

இலங்கைத் திருநாட்டின் மூன்றாவது பலமுள்ள எதிர்க்கட்சித்தலைவர் பதவி 32ஆண்டுகளின் பின்னர் தமிழ் இனத்தவரை வந்து சேர்ந்திருக்கிறது.

பகைமையுணர்ச்சியுடன் பார்த்துக்கொண்டிருந்த ஆளுந்தரப்பு, நேசக்கரம் நீட்டும் உறவினராக மாறியுள்ளது.

இதுவரை காலமும் ஜனாதிபதியாக பலர் இருந்தபோதிலும் இப்பொழுது அப்பதவியில் ஒரு மனிதர் இருப்பதைக் காணமுடிகிறது.

முன்னொரு போதுமில்லாத வகையில் நாட்டில் அமையாது என்று பலராலும் சூழுரைக்கப்பட்ட தேசிய அரசாங்கம் அமைந்து இருக்கிறது.

இரு வேறுபட்ட தேசம் என்ற கருதுகோள்கள் உடைந்து ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒருமித்த நல்லிணக்கத்தை எட்டும் வகையில் தீர்வைக் காணுமாறு பலரும் அழுத்தி உரைத்து வருகின்றனர்.

அரசினால் பிரச்சினைக்காணும் சமிக்ஞைகள் ஓரளவு வெளிப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவராக செல்வம் அடைக்கலநாதன் தெரிவு செய்யப்பட்டு ஆளும் தரப்புப் பக்கம்அமர்ந்து இருக்கிறார்.

இவ்வாறான பதவிகள் தமிழ்த் தலைமைகளுக்கு கிடைத்திருக்கக்கூடிய நிலையிலே அப்பதவிகள் மூலம் தமிழ் மக்களுக்குக்குறிப்பாக வளர்ந்து வரும் சமூகமான இளைஞர், யுவதிகளிற்கு சிறப்பான எதிர்காலத்தை வழங்க எவ்வாறான எத்தனங்களை மேற்கொள்ளப் போகிறார்கள் என்பது பலத்த எதிர்பார்ப்பாக இருக்கிறது.

நாட்டில் யுத்தம் பெரும்பாலான இளவயது விதவைகள், அதிகமான மாற்றுத் திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், அடுத்தவேளை உணவு அறியாத பிள்ளைகள், ஏதிலிகள் எனப்பல மறைபெறுமான விடயங்களை உற்பத்தி செய்திருக்கின்றது.

தமிழ் அரசியல்வாதிகள் தத்தமது குடும்பத்தின் மீட்சிக்காகவும் தமது வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொள்ள எடுக்கும் முயற்சிகளை, பாதிக்கப்பட்ட தரப்பாக இருக்கக்கூடிய தமிழ்ச்சமூகத்தின் மீட்சிக்காக மேற்கொள்ள வேண்டும்.

காணாமல்போன இளைஞர்களை மீட்டு வெளிக்கொணரவும் அவர்களது குடும்பங்களை ஆற்றுப்படுத்தவும், தொழில் வாய்ப்பற்று இருக்கின்ற இளையவர்க்கத்தை மீட்கவும், போதைப் பொருள் பாவனைக்கும், நெறிபிறழ்வுகளிற்கும் ஆட்பட்டிருக்கின்ற எமது இளையவர்க்கத்தை மனமாற்றம் செய்து நெறிப்படுத்தும் தேவையும் காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.

தமிழினத்தின் அரசியல் தலைவர்கள் இராஜதந்திர நகர்வுகளுடன் கூடிய செயல்வீரர்களாக மாறவேண்டிய நிர்ப்பந்தமான காலகட்டம் இது.

பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை வலுவூட்டவும் கல்வியைத் தொடராத இளையோரின் வாழ்வியலை தூக்கி நிமிர்த்தவும் இழந்த நிலங்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கவும், நாட்டிலுள்ள பெறுமதிமிக்க நிலக்கூட்டமான இளைஞர் மற்றும் யுவதிகளை அபிவிருத்திக்குப் பயன்படுத்தி இக்குழுவினரை பெறுமதிமிக்க வளமாக மாற்றுவதினூடாக வட, கிழக்கை விருத்தி செய்து ஒரு சுபீட்சம் கண்ட பிரதேசமாக வளப்படுத்துவதனூடாக நாட்டை ஒரு நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியடைந்த நாடாக (Sustainable Development Country) மாற்றுவது தமிழ் மக்களது எதிர்பார்ப்பாக இருக்கிறது. வெறும் கட்டடங்களைக் கட்டுவதைத்தாண்டி உடைந்த மனித மனங்களை எவ்வாறு கட்டியெழுப்புவதென்பதை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும்.

இவ்வாறான எதிர்பார்ப்புக்களையெல்லாம் மக்களது வரிப்பணத்தைக் கொண்டு பெற்றுக்கொடுக்க தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தலைவர்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பவர்களாக இருப்பார்களா? அல்லது மக்களது எதிர்ப்பார்ப்புக்களை மறந்து தமிழர்களது வாழ்வியலை வறிய பாலைவனப் பாதையில் நகரவைக்கப் போகிறார்களா? என்பதே நாம் அறியத்துடிக்கும் பதிலாக இருக்கிறது.

## பல்கலையன் ஆசிரியர் குழுமம்

**தலைமைப் பொறுப்பாசிரியர்**
கிருத்திகா தருமராஜா
ஊடகக் கற்கை விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**நிர்வாக ஆசிரியர்** - த.டயநாத்

**ஆசிரியர்கள்** - வீ.தேவயசி, ச. திருச்செந்தூரன்

**இணை ஆசிரியர்கள்** - சி.சௌமியா, வ. அனுராஜ்

**உதவி ஆசிரியர்கள்** - லோ. அனற்கேசிகா, வை. ஜீவனா, யோ. ஹாசினி, ஜி.பிறிஸ்கா, ச.பிரசாத்

**விளம்பர ஆசிரியர்கள்** - கி.கபில்ராஜ், ப.கௌசிகன், வி.சுலக்ஷன்

**புகைப்பட ஆசிரியர்கள்** - ர.உனைஸ், பு.ஐங்கரன், ப.ஜதுஷன், து.பிரசாந்தினி, சு.நிஷாந்தினி

**பக்க வடிவமைப்பு** - த.டயநாத், வீ.தேவயசி, சி.சௌமியா, வி.சுலக்ஷன்

**ஒப்பு நோக்குநர்கள்** - த.அருண், அ.ஜெறோமின், அ.றொசாறி, பா.ஜொய்சி, செ.கீர்த்தனா

**கருத்துப் படம்** - சி.சௌமியா, வீ.தேவயசி, மு.அபிராம்

பத்திரிகை வெளியீட்டிற்கு அனுமதி தந்த எமது இணைப்பாளர் **பேராசிரியர் கி. விசாகரூபன்** அவர்களுக்கு நன்றிகள்.




கருத்துப்படம்: பாடசாலைக்கு அருகிலுள்ள வீதி மழைகாலத்தில் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே உயர்வு...?

எத்தனம் என்பது ஆயத்தம்: முயற்சி: கருவி என்றவாறாக பல அர்த்தப்பாடுகள் காணப்படுகின்றன. வாழ்க்கையிலே நாம் எப்படியாவது எத்தனப்பட்டு முன்னேறி விடவேண்டும் என்றவாறான எண்ணப் பரப்பிலே தான் வாழ்ந்து வருகிறோம்.

இன்றைய உலகிலே எமது மக்களைப் பொறுத்தவரையில் நாம் கல்வி என்பது ஒரு பொருள் மீட்டலுக்கான கருவியாகவோ அந்தஸ்து உயர்விற்கான எத்தனப் பொருளாகத்தான் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

வெறுமனே வாசிப்பு என்பது மனிதனை பூரணப்படுத்தும் என்ற வறட்டு வாசகத்தை மையப்படுத்தாமல் வாசிப்பு அனுபவம் ஒரு மனிதனிடம் எவ்வாறான தாக்கத்தை / தாகத்தை ஏற்படுத்தும் என்பதே இக் கட்டுரையின் மையப்பொருளாக இருக்கப் போகிறது.

பிரபஞ்சம் பல்பரிமாணப்பட்டது. அது விந்தையான பல்வேறுபட்ட தளங்களையும் அமைதியான சித்தாந்த பெட்டகங்களையும் தன்னகத்தே கொண்டது.

அதனை எவ்வாறு நாம் அறிந்து எமது வாழ்வியலை அர்த்தப்படுத்திக்கொள்வது என்பது பற்றியெல்லாம் அறிய அறிதல் அவசியம். ஒரு விடயம் அதனை பகிர்வதற்கு பல்வேறுபட்ட உத்திகள் காணப்படுகின்றன. அதனை காணொளியாக்கும் போது எழுத்து வடிவம் மௌனித்து விடுகிறது. இசையாக மாற்றும்போது பேச்சு வழக்கு துவம்சம் ஆகிவிடுகிறது. ஆக ஒரு விடய அறிதல்தான் இங்கு மையப் பொருளாக இருக்கின்றது.

அந்த அறிதலை மேற்கொள்ள (அல்லது) அறிந்துகொள்ள சரியான வடிவம் (Form) எழுத்து வடிவம்தான் எமக்கு முழுமையான தகவல்களைத் தரக்கூடியதாக இருக்கிறது.

எழுத்து வடிவம் மூலமான பெரும்பாலான விடயங்கள் ஆவணமூலமாக நாம் பாதுகாத்து வருகின்றோம். எனவே அனைத்து விடயங்களையும் அறிந்திருப்பவன் அனைத்தையும் அறிந்த அறிஞன் என ஒரு நாளில் பெயர் பெற்றுவிடுகின்றான். ஆனால் அந்த அறிஞன் நீண்டகால அறிதலின் பேறாகவே வெளிப்படுகின்றான்.

அறிதல் என்பது ஒரு கலை, அது ஆர்வத்துடன் சம்பந்தப்பட்டது. எந்தவொரு விடயமும் வாசகன் ஒரு வரியை அறியப்படுவதற்கு ஆர்வம் அவசியம். ஆர்வமுள்ளவன் அனைத்தையும் அறிந்தவனாகிறான்.

அறிய விரும்புவன் ஒவ்வொரு தினமும் புதியவனாகவே உலகை எதிர்கொள்கிறான். அவன் படைப்பாற்றல் உள்ளவனாக (Creative Mind) காணப்படுகிறான். அவன் கடந்தகால வரலாற்றிலிருந்து நிகழ்கால வாழ்வை சீர்மைப்படுத்தித் தனது வாழ்வியலை முன்னெடுத்துச் செல்பவனாக மாறுவான் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இன்று எம் தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினை தலைமைப் பஞ்சம். இன்று மக்களை அறிந்தவர்களாகவும் மக்களது வாழ்வியலிலுள்ள துன்பம், துயரம், வாழ்வியல் நெருக்கடிகள் என்பவை அறியாத தலைமைகளே எம்முன் இருக்கின்றன. அவற்றிற்குக் காரணம் அறிதலில் உள்ள குறைபாடே அன்றி வேறு என்னவென்று சொல்லிவிடமுடியும்.

அறிவியல், தொழில்நுட்பக் கல்வித் துறையில் அபார வளர்ச்சியை எட்டியிருக்கின்ற போதிலும் ஒழுக்கம் இல்லாத கல்வியால் சமூகத்திற்கு பெருந்தீங்கே கிடைக்கின்றது என்பதையும், பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறுவது மாத்திரம் கல்வியல்ல எனவும் சமூகத்திற்கு பயனுள்ளதாக சமூகத்தால்




அங்கீகரிக்கப்பட்டதாக மாணவர்கள் இருந்தால் மட்டுமே சமூகத்தின் வளமான எதிர்காலத்திற்கு வழிகாட்டிகளாக விளங்கமுடியுமென மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் எம்.பி. அரியநேந்திரன் கருத்தரங்கொன்றின்போது குறிப்பிட்டிருந்தார்.

இந்த யதார்த்தகால சிந்தனை மரபுள்ள ஒருவராகமாற ஒருமனிதன் விரும்பினால் அவர் அறிதல் போக்கிலே மேம்பட்டவராக இருக்கவேண்டும். பல்வேறுபட்ட விடயங்களையும் அறிந்து சிந்தனை மரபுள்ளவராக மாற, விருத்தியடைய அனைத்துவிதமான செய்திகள், பல்வேறுபட்ட சிந்தனை மரபுள்ளவர்களின் கருத்துக்கள் அடங்கிய இலக்கிய வடிவங்களை அறிதல் என்பது மிகவும் முக்கியமான விடயமாக காணப்படுகின்றது.

இன்றைய காலகட்டத்திலே வாசிப்பு என்பதில் விடய சம்பந்தமான அறிதலும் அந்த அறிதலுடன் தொடர்புபட்ட ஆய்வியலும் மிகவும் முக்கியமான விடயமாகக் காணப்படுகின்றது. இந்த அறிதலுடன் தொடர்புபட்ட வாசிப்பானது வீழ்ச்சியடையும் அபாயகரமான சூழ்நிலைக்குத்தான் வாசிப்பவர்களை தேடி யாழ்.பொதுநூலகம் செல்கிறது. இதனை ஒரு கட்டமாகக்கொண்டே Mobile நூலகம் செயற்பட ஆரம்பித்திருக்கிறது. இதுவும் ஒரு முக்கியமான விடயமாகும்.

வாசிப்புப் பற்றி ஏலவே குறிப்பிட்டதற்கிணங்க தெற்காசியாவிலே மிகச்சிறந்த நூலகமாக கருதப்படும் யாழ்.நூலகம் வாசிப்பினை விரிவுபடுத்தும் நோக்கில் மொபைல் நூலகம் எனும் திட்டத்தினை அறிமுகப்படுத்தி அதன்மூலம் பேருந்து மூலம் ஒரு நடமாடும் நூலகத்தைத் தயார்ப்படுத்தி அதன்மூலம் முதியோர் இல்லங்கள், பாடசாலைகள் முன்பள்ளிகள் போன்ற அனைத்துக்கும் சென்று வாசிப்பினை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதுடன் வாசிப்பின் மகத்துவம் பற்றி பாடசாலை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கில் "ஓடி வாருங்கள் நூலகத்தை தேடி வாருங்கள்" எனும் தொனிப் பொருளில் பாடசாலைகளில் நாடகத்தினை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

07.10.2010 அன்று ஆரம்பமான இச் சேவையானது வடமராட்சி, தென்மராட்சி, முல்லைத்தீவு, பூநகரி போன்ற இடங்களில் உள்ள பாடசாலைகள் மற்றும் முதியோர் இல்லங்களை நாடித் தனது சேவையை முன்னெடுத்திருந்ததுடன் அந்த சேவைகளை வாரத்திற்கு சராசரி 2 – 3 பாடசாலைகள் வீதம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாக நூலகங்கள் தரம் - D ஐ சேர்ந்த திருமதி கலாவல்லி பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டிருந்தார். அதேவேளை வாசிப்பினை விரிவுபடுத்துவது மாத்திரமின்றி முதியோர் இல்லங்களுக்குச் சென்று சஞ்சிகைகள், நூல்கள் போன்றவற்றை வாசிக்கச் செய்து முதியோர்களை ஒரு உளவள ஆற்றுப் படுத்தலை மேற்கொள்வதற்காகவும் குறிப்பிட்டதுடன், பாடசாலை மாணவர்களுக்கு வாசிப்பினை ஊட்டுவதுடன் முன்பள்ளி சிறுவர்களுக்கும் வாசிப்பின் அவசியத்தை முன்னிலைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களையும் மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இவ்வாறு ஒட்டு மொத்தமாக நோக்கின் அறிஞர் அண்ணாவாக இருக்கட்டும் அண்மையில் இறையடிசேர்ந்த அப்துல் கலாமாக இருக்கட்டும், இல்லை எம் ஊடகத்துறையைச் சேர்ந்த பத்திரிகைகளின் ஆசிரியர்களாக இருக்கட்டும் அனைவருமே அடிப்படையில் ஒரு சிறிய மட்டத்திலிருந்து விருத்திபெற்று வாசிப்பின் மூலமே பெருவிருட்சமாக வளர்ந்தவர்கள். எனவே வாசிப்பு என்பது மிகவும் முக்கியமானது. ஒரு வளர்ச்சிக்கான வாசலைத் திறப்பது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

நூல்களில் வரலாறுகள் மற்றும் சுயசரிதைகள் மனித மனங்களிடையே ஊட்டத்தை அளித்து அவர்களை பெருவிருட்சமாக வளர்வதற்கு வித்திடுகின்றன.

பைபிளையும் டால்ஸ்டாயின் நூல்களையும் படித்ததால் தான் காந்தி "மகாத்மா" ஆனார். நெப்போலியனின் இராணுவ வரலாறல்லவோ முஸ்தபா கமாலை "அட்டாதுர்க்" ஆக்கியது. எதிர்பாரா வண்ணம் தாம் பார்த்த ஹனீபாடின் வரலாறுதான் ஐசன்கோவரின் வாழ்க்கையை மாற்றியமைத்தது. அவரை பெரும் தளபதியாக்கியது.

கால்மார்க்சின் மூலதனமே ரஷ்யாவை உருவாக்க லெனினுக்குக் காரணமாக இருந்தது. இவ்வாறு பல்வேறுபட்ட வாசிப்புக்கள் தான் மனிதர்களை புனிதர்களாக்கியது என்பது திண்ணம்.

**ச.திருச்செந்தூரான்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை மாணவர்க்கு மட்டும்

Ministry of Higher Education

HETC

THE WORLD BANK

பரீட்சைகள் என்பன திறனை வெளிப் படுத்துவதற்காக மட்டுமே எழுதப்படுவன வல்ல. அது எமது வாழ்வை வளம்படுத் தவும் உதவுகின்றது. எனினும் பரீட்சை யைக்கண்டு அஞ்சாதவர்கள் இல்லை எனலாம். பரீட்சை பற்றிய பூரண விளக்கம் இன்மையும் இதற்கான காரணமாகும். ஆகவே பரீட்சைபற்றிய பூரண விளக்கத் தைப் பெறவேண்டியது பரீட்சார்த்தியின் கடமையாகவுள்ள அதேவேளை, அதனைப் பற்றித்தெரிவிப்பது பரீட்சை ஒழுங்கமைப் பாளரின் பொறுப்பாகும்.

கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவ விடாது பயன்படுத்திக்கொள்வது நமது திறமையாகும். இவற்றுள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டுமே கிடைக்கும் / வழங்கப்படும் அரிய சந்தர்ப்பம் தான் UTEL (University test for english language) மற்றும் UCTIT (university Competency test of Information Technlogy) பரீட்சைகள் ஆகும்.

உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் இப்பரீட்சைக்கான சான்றிதழ்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு பக்க பலமாக இருப்பதுடன் மேலதிக திறமை யாகவும் கருதப்படுகின்றது. தேசிய ரீதியாக நடைபெறுகின்ற பரீட்சையாதலால் வழங்கப்படுகின்ற சான்றிதழ் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

இப்பரீட்சையை அனைத்து வருட மாணவர்களும் எழுதலாம். 2013 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இப்பரீட்சை யானது ஆரம்பத்தில் முதலாம் வருட மாணவர்களுக்கு மட்டுமே என மட்டுப்படுத் தப்பட்டிருந்தது. இலவசமாக நடத்தப்படும் இப்பரீட்சையில் மாணவர்கள் எத்தனை தடவையும் தோற்றலாம். கொழும்பு பல்கலைக்கழகமே முன்னின்று ஒழுங்கமைத்து நடாத்தும் இப்பரீட்சை ஆனது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் நடை பெறுகின்றது.

இப்பரீட்சை தொடர்பாக மாணவர்களுக்கு கைநூல் வழங்கப்படும் அதேவேளை விரிவு ரையாளர்களுக்கும் கைநூல் வழங்கப் படுகின்றது. முதலாம் வருட ஆங்கில மற்றும் கணினிப்பாடத் திட்டங்களை மையப்படுத்தியதாக இவ் UTEl மற்றும் UCTIT பரீட்சைகள் அமைந்துள்ளன. பரீட்சைகள் நடைபெறும் காலம் பீட இணைப்பாளர்கள் மூலம் மாணவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. UTEl பரீட்சை ஓகஸ்ட் - செப்டெம்பர் காலப் பகுதியிலும் UCTIT மே – ஒக்டோபர் காலப்பகுதியிலும் இடம்பெறுகின்றது.

மாணவர்களின் தேர்ச்சி மட்டத்தை பரிசோதிப்பதற்காக நடாத்தப்படும் UTEL பரீட்சையில் மாணவர்களின் நான்கு திறன்கள் பரிசோதிக்கப்படுகின்றன. வாசித் தல், எழுதுதல், கேட்டல் மற்றும் பேசுதல் ஆகியனவாகும். இங்கு புள்ளிகள் Band திட்டத்தின்படி வழங்கப்படுகின்றது. ஒன்று தொடக்கம் ஒன்பது வரையான Band புள்ளித்திட்டங்கள் காணப்படுகின்றன.

வாசித்தல் மற்றும் கேட்டல் பரீட்சைகள் தொடரறா ஊடகம் (on- line) மூலம் இடம் பெறுகின்றன. இப்பரீட்சைக்கு 5 Band க்கு மேல் எடுப்பவர்கள் மாத்திரமே எழுதுதல் மற்றும் பேசுதல் பரீட்சைகளுக்குத் தோற்ற முடியும். கேட்டல் மற்றும் வாசித்தல் இணைந்து ஒரு மணித்தியாலம் பரீட்சை நடைபெறும். எழுத்துப் பரீட்சை ஒரு மணித்தியாலம் இடம்பெறும். கட்டுரை, கடிதம் போன்றன இங்கு வினாக்களாக அமையும். வாசித்தல் பரீட்சையானது பந்தியிலிருந்து வினாக்களுக்கு விடை யளிப்பதாகக் காணப்படும். பேச்சுப் பரீட்சை 5 நிமிடம் இடம்பெறும். தலைப்புக்கள் தந்து 5 நிமிடம் தயார்ப்படுத்த நேரம் தருவார்கள். அதன் பின்னர் விவாதம் மாதிரி இடம்பெறும். இரு குழுக்களாக இருந்து இதனைப் பரிசோதிப்பார்கள்.

இதனை போன்றே கணனியை மையப் படும் UCTIT பரீட்சை நடைபெறுகின்றது. 2014ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இப்பரீட்சையானது மாணவர்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திறனை பரிசோதிப்பதாகக் காணப்படுகின்றது. இப்பரீட்சையில் பின்வரும் திறன்கள் மாணவர்களிடம் பரிசோதிக்கப்படுகின்றது.

- Fundomentals of ICT
- Working with a computer
- Word processing
- Spreadsheet management
- Database handling
- Electronic presentation
- Internet and communication
- Managing a computer

இங்கு எழுத்துப் பரீட்சை (Theory exam) செயன்முறைப் பரீட்சை (Practical exam) இரண்டும் நடைபெறுகின்றது. 90 நிமிடம் பல்தேர்வு வினாக்கள் (MCQ) தொடரரா ஊடகம் (on- line) மூலம் இடம்பெறும். இரண்டு மணித்தியாலங்கள் செயன்முறைப் பரீட்சை நடைபெறும்.

70% மேல் புள்ளிகளைப்பெற்றவரே சித்தியெய்தியவராகக் கருதப்படுவர். எனினும் இரண்டு பரீட்சைகளிலும் சரா சரியாக 50% மேல் புள்ளிகளைப் பெற்றிருக்கவேண்டும். தொடரரா பரீட்சையில் on line 65% மேல் புள்ளிகளைப் பெற்றவரே செயன்முறைப் பரீட்சைக்குத் தகுதியுடையவராகக் கருதப்படுவார்.

இப்பரீட்சை மே – ஒக்டோபர் காலப் பகுதியில் நடைபெறுகின்றது.

UTEL பரீட்சை பற்றி ஆங்கில மொழி கற்கைகள் இணைப்பாளர் Dr. N. கருணாகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

UTEL பரீடசைக்கு 1 500 பரீட்சார்த்தி கள் விண்ணப்பித்து 500 பேர் இரண்டாவது பரீட்சைக்குத் தோற்றி 142 பேர் சித்தியடைந்துள்ளனர். அவர்களுள் 122 பேர் எழுத்துப் பரீட்சை எழுதி 110 பேர் பேச்சுப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். யாழ். பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகத்தையும் சேர்த்து எண்பது மாணவர் கள் இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர் என்றார். மேலும்

உலக வங்கியின் அனுசரணையுடன் HETC (Higher Education for twenty first Century) திட்டத்தின் கீழ் உயர் கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் இப்பரீட்சை கள் ஆனவை தொடர்ந்து நடைபெறுமா என்பது சந்தேகத்துக்கிடமான விடயமாகும். இனிவரும் காலங்களில் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களுக்கும் பரீட்சையை நடாத்தும் அதிகாரம் வழங்கப்பட்டாலும் அது எவ்வளவுதூரம் வினைத்திறனாக இருக்கும் என்றும் எவ்வளவிற்கு எவ்வளவு சிறப்பாக ஒழுங்கமைக்கப்படும் என்பதும் கேள்விக்குரிய விடயம் என்று கூறினார்.

பெரும்பாலான மாணவர்களுக்கு இப் பரீட்சை பற்றித் தெரியாத போதிலும் தெரிந்த மாணவர்கள் இப்பரீட்சையை எழுத முன்வருவதில்லை. பல்கலைக்கழக மாணவர்களுக்கே உரிய இச்சந்தர்ப்பத்தை மாணவர்கள் தவறவிடக்கூடாது.

எது எவ்வாறாயினும் பரீட்சைகள் என்பவை வெறும் புள்ளிகளை மட்டும் பெறுவதற்கல்ல. எமது திறனை வளப் படுத்துவதற்குமாகும். இச்சந்தர்ப்பத்தை மாணவர்கள் சரிவரப் பயன்படுத்த வேண்டும். இப்பரீட்சை தொடர்ந்து நடைபெறுமா என்பது கேள்விக்குறியாக உள்ள அதே வேளை "அலை வரும் போது தலை முழுகு" என்பதற்கிணங்க மாணவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது திறமைகளை வெளிக்காட்டி முன்னேற வேண்டும்.










செ. கீர்த்தனா

## பெண்கல்வியும் சமுதாய முன்னேற்றமும்

பெண் என்பவள் ஒரு குடும்பத்தில் முக்கிய அங்கம்வகிக்கிறாள். அனைத்து அங்கத்த வர்களுக்கும் அடித்தளம் இடுபவளும் பெண் தான். கல்வி என்பது மனிதனை அறிவுடை யதாக்குகிறது. இக்கல்வி பெண்களுக்கும். அவசியமான தொன்றாகும். சமூகத்தில் பெண் பிறக்கும் போது பெற் றோருக்கும், திருமணம் முடித்தபின் கணவருக்கும், முதுமையில் பிள்ளைகளுக்கும் பணிந்து வாழவேண்டும் இந்நிலையில் பெண்கள் கல்வினைத் தொடர வடமாகாணம் தன் அகக்கண்களை திறந்தது என்றால் மிகையாது.

உயர்கல்விகற்ற பெண்ணுக்கு நல்ல மணமகன் கிடைப்பது சிரமம், கல்வி கற்ற பெற்றோர்களின் வழிகாட்டல் கிடைக்காமை, ஆணாதிக்க சிந்தனை போன்றனவே என்பன வே வட மாகாணத்தின் சில பகுதிகளில் பெண்கள் உயர்கல்விக்கு தடைக்கற்களாக உள்ளன.

இன்றும் பெண் சீதனம் மற்றும் பாலியல் கொடுமை என்று எத்தனை தாக்குதல்கள் பெண்ணினம்மீது நடைபெற்ற வண்ணமுள்ளது. இந்நிலைமாற கல்வி ஒன்றே தீர்வு என பெண் கள் உணரவேண்டும். பெண்கல்வி இல்லாத நிலத்தில் "புல்விளைந்திடலாம் மாறாக நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை" என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கூற்று ஓரளவுக்குத்தான் வடமாகாணத்தில் நிறை வேறியுள்ளது என்றால் மிகையாகாது. இது ஒருபுறம் இருக்க

பெண்கள் உயர்கல்வி கற்க அனுமதிக்க-ப்பட்டாலும் பல இடங்களில் உயர்பதவியெ-ன்று வரும் போது அது அவர்களுக்கு மறுக்க-ப்பட்டே வருகின்றது. குடும்பம், வேலைத்தளம் என இரண்டிலும் பங்களிப்பை ஆற்றவேண்டிய இரு வேலைச்சுமை (Dual work) பெண்களு க்கு இருப்பதும் சில சந்தர்ப்பங்களில் அவர் களின் உரிமைகள் மறுப்பதற்கு காரணமாகக் கூறப்படுகிறது. மேலைத்தேய நாடுகளில் வேலைப்பகிர்வு ஆண் பெண்களுக்கிடை யில் சரிசமனாகப் பங்கிடப்படுவதால் அங்கு பெண்களால் இரண்டு பொறுப்புக்களையும் சரிவரச் செய்யக்கூடிய நிலைமை உருவாகி ன்றது. இந்நிலையில் எவ்வளவு தூரத்திற்கு உயர்கல்வி கற்று தமது நிலையை உயர்த் தமுடியுமோ அவ்வளவு தூரத்திற்கு கல்வி கற்பது தம்மை உயர்த்துவதற்கு மட்டுமன்றி குறித்த சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும் படிக்கல்லாய் அமையும் என்றால் அது மறுப் பதற்கில்லை.

அ.றொசாறி

BALA Service Station
BALA Service Station
Kodikamam Road,
Puloly South, Puloly,
T.P. 021 226 2847, 0776192927

தேனுஜன் றேட்ஸ்
எம்மிடம் கட்டடப் பொருள்கள், துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள், விவசாய உள்ளீடுகள், கிருமிநாசினி, உரவகைகள், மின் உபகரணங்கள், Paint வகைகள், அழகுசாதனப் பொருள்கள், கோழித் தீவனங்கள், எரிபொருள் வகைகள், நீர்க்குழாய் உபகரணங்கள் போன்றவற்றை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
உரிமையாளர் சபா யோகசிங்கம் (குமார்)
T.P: 0776607851
சுன்னாக வீதி, நவற்கிரிச் சந்தி, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழையடிக்கப்பட்ட இளமை



என்னைப் பற்றி எவ்வாறு அறிமுகம் செய்து கொள்வது?

தூக்கிளறியப்பட்டு நடுவீதியில் கிடப்பவனுக்கு முகமும் முகவரியும் தேவையில்லை என நினைக்கிறேன். ஓர் இளைஞன் என்ற மனித அடையாளத்தைத் தவிர எதுவுமில்லை என்னிடத்தில் இப்போது. அந்த இருவரால் எப்போதோ நெய்யப்பட்ட வாழ்வு எனும் வலையில் பூச்சியாய் விழுந்து திணறித் தவிக்கின்றேன். மூச்சு விடமுடியாதபடி துயர் வந்து அடைக்கின்றது.சிறு பிள்ளையாய் இருந்தபோது கால் கல்லில் இடராதபடி தாக்குப்பிடிக்க இருந்தனர் ஆயிரம்பேர். குடும்பமும் சமூகமும் இந்த உலகமும் உள்ளங்கை நடுவில் என்னை எப்போதும் தாங்கிப் பிடிக்குமென நினைத்துக் கொண்டிருந்தேன். எப்படி கடந்து செல்கிறது காலம். இளைஞன் என்கிறார்கள். கட்டிளங்காளை என்கிறார்கள். நம்பிக்கை என்கிறார்கள். முயற்சி என்கிறார்கள். உறுதி என்கிறார்கள். அடைமொழிக்குள் அடைபட்டுக் கிடக்கிறேன். இரைப் பறவையாய் வலியின் இரணங்களோடு புரிந்து கொள்ளுங்கள் என்ற எனது ஒற்றைக்குரல் வலி.

இளமை, சரித்திரப் பக்கங்களின் வரலாறுகளிலெல்லாம் இளைஞர்களின் தடம் பொதிந்திருக்கும் என்பர். மானுடத்தின் முழு வரலாற்றையும் சமபாதியாய் சுமப்பவர்கள் இளையோரே. எமது தாயகத்தின் பரப்பு முழுவதிலும் இளம் குருதிக்கறை தியாகமாய்ப் படிந்திருக்கிறது.

அதன் வெற்றி / தோல்வி மேல் கட்டப்பட்டிருக்கிறது எமது இனத்தின் இருப்பு. இளமைப் பருவம் இல்லையேல் மனிதவாழ்வுப்பருவம் கேள்விக் குறியாகிவிடும். இளமை இல்லையேல் எதுவும் இல்லை. சாதிப்பின் தடங்கள், தியாகத்தின் வேர்கள் பணியின் தேவைகள், உறவின் பிணைப்புகள் பிரசவிக்கும் கருக்கட்டும் பருவம் இளையோரின் பருவம். சாதிப்புமின்றி, தியாகமுமின்றி பணியுமின்றி, நல் உறவுமின்றி ஒருவன் அல்லது ஒருத்தி தனது பருவத்தைக் கடந்து செல்கிறார் என்றால் அவர் மானுடப்பிறவியாயிருக்க துளி அளவேனும் வாய்ப்பே இல்லை. அவர் பிறப்பில் அர்த்தம் ஏதும் இருக்கப் போவதுமில்லை.

மானுட வரலாற்றின் ஒவ்வொரு பதிவிலும் இளமையின் இலட்சியம், குறிக்கோள், அதை ஒட்டி எழுந்த வாழ்வு சமூக விடுதலை, தேசவிடுதலை, மனித நேயம் என்றெல்லாம் தடங்கள் இருக்கின்றன. போருக்குப் பின்னரான நமது மண்ணில் ஏற்பட்டு வரும் மாற்றத்தை நாம் அனைவரும் அறிவோம். கல்வி கடைசியில் போய்விட்டது. பண்பாடு பாதாளத்துக்குச் சென்றுவிட்டது. ஆன்மீகம் அர்த்தம் இழந்து விட்டிருக்கிறது. வாழ்வுக்கோலம் வாசலுக்கு வெளியே பாய் விரித்திருக்கிறது. போரும் அதன் புழுதியும் போர்தின்ற மானுடமும் சமூகத்தின் இருப்பும் உலகத்தின் மூலையில் நின்றுகொண்டிருக்கிறது. சமாதான தூதுவர்களை காப்பற் வீதி வழியாக அழைத்து வந்து அதிகார இருக்கையில் அமரவைத்து அழகு பார்க்கும் அதே வேலையையும் செய்து கொண்டிருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் யதார்த்தமென்ன? ஒருபுறம் பொருளாதார அபிவிருத்தி, வாசல் வரைக்கும் வந்து சட்டி,பானை. பெட்டி, உடுப்பு, உடை, சீப்பு, சோப்பு, கண்ணாடி என கடைவிரிப்புக்கள். அரசியல் ஆதாய பேச்சுக்கள், இவற்றுக்கு நடுவே பசிக்கொடுமை, வன்புணர்வு, கையறுநிலை, கொலை, வகைதொகையற்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள், நிலமற்ற நிம்மதியற்ற வாழ்வு, அழுகையும் துயரமும் சாபமுமாக மாறிவிட்ட நிலை.

இவற்றுக்கு நடுவே நானும் எனது இளமையும் அனுசரித்துப் போவதா? கேள்வி எழுப்புவதா? இல்லை புடமிட்டுத் திரும்புவதா? என்னைப்போல எல்லா இளைஞர்களும் வலியின் இரணங்களோடு உள்ளார்கள். இவ்வாறு நமது வாழ்வுப் பயணத்தில் மற்றவர்களால் நெய்யப்பட்ட வலையுள் விழுந்து கிடக்கின்றோம்.

என்ன செய்வோம் நண்பர்களே. உனக்கும் எனக்குமான பணியின் தொடக்கம் இங்கிருந்துதான் ஆரம்பிக்கப்படவேண்டும். சேர்ந்து செயற்படவேண்டிய காலம் இதுதான். ஆனால் நீயோ களவாய் அவுஸ்திரேலியா போக நினைக்கின்றாய். எமது சமூக கடமையைச் சிறிய புள்ளியில் இருந்தேனும் தொடங்க வேண்டும். இறுதியாய்த் தனக்காகவும் தான் சார்ந்தவர்களுக்காகவும் சுயநலனுக்காகவும் துடிக்கின்ற இதயம் சாதாரண இதயம் பொதுவாக எல்லா உயிரினங்களுக்கும் உள்ளது போன்று. ஆனால் அடுத்தவனுக்காகவும் அயலவனுக்காகவும் துடிக்கின்ற, அழுகின்ற இதயம் ஆண்டவன் இதயம் மனித இதயம். இத்தகைய இதயம் கொண்டோரைத்தான் மானுட வரலாறு மகத்தானவர்கள். மாமனிதர்கள் என தன்னுள் வைத்துள்ளது. சுமந்தும் வருகிறது. இவர்கள் கல்லறைகளில் இன்றி நம்முன் வாழ்கிறார்கள். முடிவாக இளையோரே ஆண்டவன் தந்த உனக்கும் எனக்குமான இதயம் யாருக்காக இனித்துடிக்கப் போகிறது.

"எல்லாம் விதிவசப்படி தான்.
நடக்கும் ...... என்பதை மறந்துவிடு!
இளமை தோளில் இருக்கும்போதே
இலட்சியம் நெஞ்சில் இருக்கும் போதே
எது நிஜம் என்பதைக்
காட்டிவிடு!
அப்போது
காலம்
புரண்டு படுக்கும்"
(வைரமுத்து)



சி.சௌமியா




ஸ்ரீ கணேசன் அச்சகம்
Sri Ganesan Printers
போட்டோப்பிரதிகள், அடையாள அட்டை கவரிடுதல்,
புத்தகம் கட்டுதல், பாடசாலை உபகரணங்கள், கலர் பிறிண்ட மற்றும்
நினைவு மலர்கள், பெயர் பலகைகள், திருமண, பூப்புனித, பிறந்தநாள்
அழைப்பிதழ்களையும் நவீன முறையில் அச்சிட்டு பெற்றுக் கொள்ளலாம்.
Prop:- K.Gowrysangar
Email :- shangkar.01@gmail.com
T.P No:- 077 7392935
077 8788396
சங்கானை வீதி,
அச்சுவேலி.

பிள்ளையார் Food City
பிரசவ தாய்மார், குழந்தைகளுக்கான அனைத்து விதமான பொருள்களையும் பிள்ளையார் Food City இல் பெற்றுக் கொள்ளலாம்.
பேபி பொருள்கள்
பம்பஸ் (பான்ரி பம்பஸ்), பேபி சட்டை, நப்பின், பேபி சூ, பேபி கிப்ற், பேபி வைப்ஸ்
பேபி Bag, பேபி மெத்தை, பேபி சூப்பி, பேபி நுளம்பு வலை, பேபி கூடை, பேபி பேசன், பேபி இயப்பட்ஸ்
பேபி ரவல், பேபி பவுடர், பேபி கிறீம், பேபி மில்க் Bath, பேபி லோஸன், பேபி ஓழிக்குளோன், பேபி சோப்
யாழ் வீதி, மானிப்பாய், தொ.பேசி: 077 415 6111



OLINILA STUDIO
Rajaveethy, Atchuvely.
TP: 0771911017



சன்னதி முருகன் ஸ்ரோர்ஸ்
சன்னதி வீதி,
பத்தமேனி, அச்சுவேலி.
T.P: 021 205 8682


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனைக்கு தடைகள் பொருட்டல்ல



மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பிறந்து சிறுகுழந்தையாக இருந்து பின்னர் இளமைப்பருவத்திற்குச் செல்லும் போது தமக்கென சில மாற்றங்களை கட்டாயம் ஏற்படுத்தியாகவேண்டும். அப்போதுதான் இன்றைய நவநாகரிக உலகில் எதிர்நீச்சல் போட்டு வெற்றிகரமாகக் கரையொதுங்க முடியும். இக்கருத்திற்கு ஒரு உதாரணமாகவே இலங்கையின் வடக்கிலுள்ள இளையோர் யுத்தத்திற்குப் பின்னர் பல்வேறு இன்னல், இடர்களுக்கு மத்தியில் தமது விடாமுயற்சியால் பலசாதனைகளை படைத்துள்ளனர். குறிப்பாக கல்வியில் சாதிக்கப் படாதபாடுபட்டு முன்னேறுவதை கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது.

கடந்தகால யுத்தத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தை நோக்கின் கொடூரமான யுத்த சூழல்களை எதிர்கொண்டு பல கசப்பான அனுபவங்களை மனரீதியாகவும் உளரீதியாகவும் சுமந்தபடி சாதிக்கத் துடிக்கின்றனர். 2009 ஆம் ஆண்டுடன் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின் னர் எம் தமிழ் இளையோர்கள் தமது கல்வி யில் சாதிக்க வேண்டுமென்ற துடிப் போடு தமது பயணத்தை ஆரம்பிக்கின்றனர். இடப்பெயர்வுக்கு அடுத்தகட்டமான மீள் குடியேற்றத்திற்குப் பின்னர் ஒழுங்கமைக்கப் படாத அடிப்படை வசதியின்மை காரணமாக பல்வேறு பிரச்சினைக்கு மத்தியில் தமது கல்வியைத் தொடர்ந்து பல சாதனைகளைப் படைத்திருக்கின்றனர்.

குப்பிவிளக்கில் கல்வி கற்று நடந்து பாடசாலை செல்வதும் சரியாக மூன்று வேளையும் நல்ல உணவு உண்ணாமலும் கல்வியை தொடர்ந்த மாணவர்களும் பலர் உண்டு. என்ன செய்ய எல்லாம் காலத்தின் கட்டளை தமிழனாக பிறந்தால் இத்தகைய கசப்பான அனுபவங்களை சுமக்க வேண்டும் என்பது இறைவனின் கட்டளை போல! இருப்பினும் விடியல் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தமது கல்வியைத் தொடர்கின்றனர்.



க.கவிதா

இதற்கெல்லாம் சிறந்த உதாரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பிறநது யுத்தசூழலைக் கடந்து சாதித்த கவிதா கந்தசாமி என்ற மாணவியைக் குறிப்பிட முடியும். இம்மாணவி 2012 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் கலைப்பிரிவில் தோற்றிமுதல் நிலையைத் தனதாக்கினார். தனது குடும்ப வறுமையினையும், கண்டு அனுபவித்து கழித்த யுத்தத்தையும் ஒருபொருட்டாகக் கொள்ளாமல் கல்வியில் சாதிக்கவேண்டும் என்ற கனவோடு பயின்று சாதனை படைத்தமை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இறுதி யுத்தத்தில் தனது காலில் ஏற்பட்ட படுகாயத்தையும் ஒரு குறையாகக் கொள்ளாமல் தனது குடும்ப எதிர்காலம் தனது வாழ்க்கை என்பவற்றை கருத்திற் கொண்டு உயர்தரத்தில் சாதனை படைத்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி கற்று வருகின்றார். இச்சாதனை தொடர்பாக மேற்குறித்த மாணவியிடம் வின வியபோது, எனது குடும்ப வறுமையினையும் உடல் நிலையினை நான் ஒரு பிரச்சினையாக எடுத்துக்கொள்ளாது உயர்தரத்தில் மாவட்டமட்டத்தில் முதல்நிலை பெறவேண்டும் என்ற ஆவலோடு கல்வியைத் தொடர்ந்தேன். நான் இந்நிலையை அடைய இரவும் பகலும் அயராத முயற்சியுடனும் நம்பிக்கையுடனும் கல்வி பயின்றதால் இந்நிலையை அடைய முடிந்தது. எல்லா மாணவர்களாலும் சாதிக்க முடியும். நம்பிக்கையுடனும் விடா முயற்சியுடனும் கல்வியைத் தொடர்ந்தால் என்நிலையை விட மேலும் சாதிக்க முடியும் என்று கூறினார்.

இம் மாணவியைப் போன்றே பல மாணவர்கள் பல்வேறுதுறைகளில் பல சாதனைகளைப் புரிந்துள்ளதுடன் இன்னும் பல சாதகைனை செய்வதற்கும் காத்திருக்கின்றனர். எம்சமூகத்தில் துடிப்புள்ள பல இளையோர்கள் காணப்படுகின்ற போதும் போதியவசதியின்மை காரணமாக அவர்களது குறிக்கோள் இலட்சியம் என்பன பாழாகிப் போகின்றது வேறுசிலரை குறிப்பிடுவதாயின் தமது எதிர்காலத்தை நோக்கிய பாதையில் இலட்சிய குறிக்கோள் இன்மையால் அவர்களது வாழ்வு கானல் நீர்களாகின்றன.

இருப்பினும் யுத்த நினைவுகள், வறுமை, வசதியின்மை என்பவற்றை ஒரு பிரச்சினையாகக் கொள்ளாமல் இன்னும் எத்தனையோ இளைஞர்கள் நம் கண்முன்னே சாதிக்கக் காத்திருக்கின்றனர். கோழைகளால் எப்போதும் வரலாறு படைக்கமுடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். தைரியமும், அறிவும் நிறைந்தவர்களால்த்தான் சரித்திரத்தை உருவாக்க முடியும். தைரியம் என்பது தனித்துவமான குணமாகும். அறிவு என்பது அனுபவத்தின் வாயிலாக ஏற்படுகிறது.

**வ. அனுராஜ்**

# இணையத்தின் பதிவுகளில் சில பகிர்வுகள்

**சாதனையாளர்கள் பற்றிய ஓர் பார்வை**



ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டு உட்காரக்கூட முடியாமல் குப்புற படுத்தபடியே பல நாவல்களை எழுதியவர் - **கல்கி.**



மூன்று முறை இன்டர்மீடியட் தேர்வில் தோற்றவர், கணித துறையில் பெரும் சாதனை களைப் படைத்தவர்.

**-ராமானுஜம்.**



வலிப்பு நோய். இதய நோய், மூட்டு வலி இத்தனை வியாதிகள் இருந்தும் சாதனை செய்த விளையாட்டு வீரர்

**-லியாண்டர் பயஸ்**




கேட்கும் திறனை இழந்தும் உலகம் போற்றும் மேதை ஆனவர்.

**-பீத்தோவான்**



தந்தை சிறு வயதிலேயே காணாமல் போனவர் தாய் மனநிலை சரியில்லாதவர், இவர்களுக்கு மகனாகப் பிறந்து தன் உழைப்பால் உலகம் போற்றும் நகைச்சுவை நடிகரானார்.

**-சார்லி சப்ளின்**



பாலிடெக்கில் நுழைவுத் தேர்வில் தோற்றவர், தன் அயராத உழைப்பால் மாபெரும் விஞ்ஞானி ஆனவர்.

**-ஐன்ஸ்டீன்.**



கரும்பலகை வாங்கக் கூட காசில்லாமல் கரியால் மணவெட்டியில் எழுதி கல்வி கற்றவர். செருப்புத் தைக்கும் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்து அமெரிக்க ஜனாதிபதி ஆனவர்.

**-ஆபிரகாம் லிங்கன்**



ஞாபக மறதி குறைபாடு உடையவர், கிராமபோனை கண்டு பிடித்து பிறர் கேட்டு மகிழும்படி செய்த செவிடர் 1000 தடவைகளுக்கும் மேல் தோல்வியடைந்து மின் விளக்கைக்கண்டு பிடித்தவர்.

**-தோமஸ் அல்வா எடிசன்.**



தெருவிளக்கின் வெளிச்சத்தில் படித்தவர், அவமானங்களையும் எதிர்ப்புக்களையும் தமது அன்பாலும் அறிவாலும் வென்ற மாமனிதர் அதிக கல்வித்திறன் வாய்ந்த இந்தியாவின் முதல் ஜனாதிபதி, தூங்கும்போது வருவது கனவல்ல. உன்னை தூங்க விடாமல் செய்வதுதான் கனவு

Dr. **அவுல் பக்கிர் அப்துல் கலாம்.**

வெற்றி பெறுவது மிகவும்
எளிதானதே. என்ன செய்கிறாய்.
என்பதை அறிந்து செய்து,
செய்வதை விரும்பிச் செய்,
செய்வதை நம்பிக்கையோடு செய்!

நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு எவராலும் தடுக்க இயலாது.
காத்திருக்கிறது. வெற்றி உனக்காக.



Gramophone

**சி. சௌமியா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் சவால்களும் சமாளிப்புக்களும்



ஆரம்பத்தில் இருந்ததைவிட ஊடகத் துறை தற்போது பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. தொழிநுட்ப வளர்ச்சி, தொடர்பாடல் துறையில் புதியதொரு தொடர்பாடல் பண்பை உருவாக்கி இவ் உலகை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து பிரமிக்கத்தக்க மாற்றத்தை உண்டு பண்ணியதில் இத்துறைக்கு பாரிய பங்களிப்பு இருந்தள்ளது. ஊடகம் என்பது மக்களுக்குத் தகவலை வழங்கி அவர்களை எப்போதும் தயார் நிலையில் வைத்திருந்து விழிப்புடன் இருக்கச் செய்கிறது.

தற்போதைய சூழ்நிலையை எடுத்துக் கொண்டால் ஊடகத்துறை சார்ந்த அனைவரும் பாரிய சவால்களை எதிர்நோக்கிய வண்ணமே உள்ளனர். கார்த்திகை மாதம் 01 ஆம் திகதி 2008 ஆம் ஆண்டளவில் சண்டேலீடர், மோனிங்லீடர் பத்திரிகை நிறுவனத்துள் நுழைந்த குழுவொன்று அப்பத்திரிகைநிறுவனத்தைத் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளமையைக் குறிப்பிடலாம். மகாராஜா கூட்டுஸ்தாபனம், சூரியன் வானொலி, வெற்றி வானொலி போன்றனவும் தாக்கப்பட்டு ஒலி ஒளிபரப்புத் தடையும் விதிக்கப்பட்டது. லசந்த விக்கிரமதுங்க எனும் ஊடகவியலாளர் இனந் தெரியாத துப்பாக்கிதாரிகளால் 2009 ஆம் ஆண்டு தை மாதம் 8 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சாதிக்கத்துடிக்கும் ஊடகத்துறைக்கும் ஊடகவியலாளர் பலருக்கும் சர்வதேச அளவில் பல விருதுகள் முன்மொழியப்பட்டுள்ளன. சர்வதேச ஊடகவியலாளர் விருது, சர்வதேச பத்திரிகைசார் நிறுவன சுதந்திர ஊடகவியலாளர்கள் போன்ற விருதுகள் ஊடகவியளார்களை ஊக்குவிப்பதற்கென வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான விருதுகள் எங்களது நாட்டில் இன்னும் வழங்க முற்படவில்லை. எனினும் சர்வதேச அளவில் அனிதா பிரதாப், நெல்லி ஃபிளை போன்ற ஊடகவியலாளர்கள் சாதனை படைத்தவர்



**திரு. ரவீந்திரன் நிர்மல்**
ஊடகவியலாளர்
(டான் தொலைக்காட்சி)

தற்போது உலகில் காணப்படும் அனைத்துத் தொழில்களும் சவால் நிறைந்தவையாகத்தான் காணப்படுகிறது. ஒவ்வொரு தொழிலிலும் மக்கள் சாதிக்கத் துடித்துக் கொண்டு இருக்கின்றனர். இத்துறையில் சாதனை என்பது ஏற்றமாகவும் இருக்கலாம். ஏமாற்றமாகவும் இருக்கலாம். ஒரு செய்தி மக்களைச் சென்றடைய ஊடகவியலார் தனது உழைப்பை அர்ப்பணிக்க வேண்டும். இப்பொழுது எடுத்துக்காட்டாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவால் தீவிரவாதத் தலைவர் ஒசாமா சுட்டுக்கொல்லப்பட்டார் என்ற செய்தியானது தவறுதலாக அமெரிக்க ஜனாதிபதி ஒசாமாவால் தீவிரவாதத் தலைவர் ஒபாமா சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற ஒரு எழுத்துப்பிழையால் ஒரு செய்தி தனது அர்த்தைத்தையே மாற்றமுடியும். எனவே, செய்தியைப் பெறுநர் மட்டுமல்லாமல் செய்தி வழங்குநரும் விழிப்புடன் இருக்க வேண்டும்



**திருமதி. ரேவதி நிர்மல்**
ஊடகவியலாளர்
(டான் தொலைக்காட்சி)

ஆரம்பத்தில் பெண்ணான எனக்கு ஊடகத்துறைக்குள்நுழைய மிகவும் தயக்கமாகவே இருந்தது. தடைகளையும், கட்டுப்பாடுகளையும்மீறி நான் துணிந்து இத்துறைக்குள் கால்பதித்தேன். அதன் பின் எனது குடும்பம், கணவர் எனக்குப் பக்கபலமாக இருந்தது. இருப்பினும் இத்துறை பாரிய சவால்களையும், பிரச்சினைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அனேகருடைய கருத்து ஒரு பெண்ணான உனக்கு இத் தொழில் தேவைதானா? என்பதே இருப்பினும் இதையெல்லாம் மீறி கால்பதித்து தடம் பதிக்க இன்னும் முயன்றுகொண்டுதான் இருக்கிறேன்.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகள் மட்டுமே சவால்களாக இருந்ததில்லை சம்பளப் பிரச்சினைகள், வெளியிலிருந்து வரும் அச்சுறுத்தல்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதனைப் போன்ற சவால் களையும் தகர்த்தெறிந்து அமெரிக்க ஜனாதிபதி நிக்ஷனின் வோட்டர் கேட் ஊழலை வெளிப்படுத்திய ஒரு ஊடகவியளாளர் போன்ற எத்தனையோ உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

**வீ.தேவயசி**




சினிமா என்னும் ஒரு கலை இன்று எத்தனையோபேரைத் தன்பால் கவர்ந்து வைத்துள்ளது. தென் இந்தியாவைப் பொறுத்தவரை அதன் வளர்ச்சிப்போக்கு மிக வேகமாக சென்று கொண்டிருக்கும் இந்தக் கால கட்டத்தில் இலங்கையில் எத்தனையோ இளம் படைப்பாளிகள் காணப்பட்ட போதும் சரியான களத்தை இன்றுவரை நம்மால் அடைய முடியவில்லை. காரணம் சினிமாத்துறைக்கு ஊக்குவிப்பும், ஆதரவும் குறைந்து கொண்டு சென்றமையும், முப்பது வருடமாக இடம்பெற்ற யுத்த சூழ்நிலையும் இலங்கைத் தமிழ் சினிமா முன்னேற்றத்துக்கு தடையாக இருந்துள்ளன. ஆனால் இன்று அந்த நிலைமாறி இலங்கைத் தமிழ் ஊடகங்கள் சினிமா என்னும் கலையை இளைஞர்கள் மத்தியில் நெறிப்படுத்த பல முயற்சிகளை மேற்கொள்கின்றன. வசந்தம் ரீவி, நேத்ரா ரீவி என்பன இதில் பெரும் பங்களிப்பினை வழங்குகின்றன. நேத்ரா ரீவியானது Filmcity என்னும் நிகழ்ச்சியை ஆரம்பித்துள்ளது. இந் நிகழ்ச்சி ஒவ்வொரு வாரமும் வார இறுதியில் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் ஒவ்வொரு கலைஞர்களின் குறுந்திரைப்படங்களும் திரையிடப்படும். பின் அத்திரைப்படத்தில் காணப்படும் நிறை, குறை என்பன விமர்சிக்கப்படும். இந்நிகழ்ச்சியின் வெற்றி தாக்கம் Season 01 - Season 03வரை சென்றுள்ளது. இது இளைஞர்களின் சினிமா ஆர்வத்திற்கு கிடைத்த வெற்றியாகும். இந் நிகழ்ச்சி மூலம் இளம் படைபாளிகள் வெளி உலகத்திற்கு அறிமுகம் செய்யப்படுகிறார்கள்.

அதுமட்டுமல்லாது "மண்வாசனை" என்ற நிகழ்ச்சி மூலம் நம் நாட்டுக்கலைஞர்களின் இசையமைப்புத் திறனை வெளிஉலகிற்கு அடையாளப்படுத்தும் செயற்பாடும் மேற்கொள்ளப்படுகிறது. இதில் நம் நாட்டு கலைஞர்களின் இசையமைப்பில் உருவாகும் பாடல்கள் திரையிடப்படும். இது வெறும் பாடல்களாக மட்டுமல்லாது காட்சி அமைப்பாகவும் வெளியிடப்படுகின்றது.

இதேபோல வசந்தம் தொலைக்காட்சியில் நம்ம Hits என்னும் நிகழ்ச்சியானது ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 7 மணியளவில் நடைபெறுகின்றது. அத்துடன் இந்நிகழ்ச்சியில் கலைஞர்களின் இசைத்தட்டுக்களும் அறிமுகம் செய்யப்படுவதோடு, பாடல் அமையப் பெற்றமுறைகளும் எடுத்த முயற்சிகளும் கலந்துரையாடப்படுகிறது. இவ்வாறான கலந்துரையாடல்கள் இன்னும் பல இளம் படைப்பாளிகளை உருவாக்கும் பயிற்சிப் பட்டறையாகவே காணப்படுகின்றது. அது மட்டுமல்லாது வசந்தம் தொலைக்காட்சியானது தனது 6 ஆவது பிறந்ததினத்தில் நம்நாட்டு கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக நிகழ்ச்சியினை நெறிப்படுத்தியமை வரவேற்கத்தக்க ஒரு விடயம் ஆகும்.

இவ்வாறு ஊடகங்கள் 'சினிமா' இசையமைப்புத் துறைக்குக் காட்டிய ஆதரவினால் இன்று நம்நாட்டு கலைஞர்கள் எத்தனையோபேர் தென்னிந்திய சினிமா என்னும் சிகரத்தில் கால் பதித்துள்ளார்கள்.

இவ்வளவு காலமும் தென்னிந்திய சினிமா, தென்னிந்திய சின்னத்திரை இசை அமைப்பே என்றும் ஆக்கபூர்வமானது என்ற எண்ணக்கரு இன்று சற்று மாற்றமடைந்த ஒன்றாக காணப்பட்டிருப்பதனைக் காண முடிகின்றது. பொதுவாக இலங்கையில் சின்னத்திரை என்ற ஒன்று பெரியளவில் காணப்படவில்லை சிற்சில தொடர்கள் காட்சிப்படுத்தப்பட்டாலும் அவை ஒரு வாரம், ஒருமாதம் நிலைத்ததாகவே காணப்படுகிறது. ஆனால் இன்று 'காதல் கனவுகள்' 'காவேரி' 'சித்திரம்' என்று எத்தனையோ தொடர் நாடகங்கள் காட்சிப்படுத்திய வண்ணம் காணப்படுகின்றது. பொதுவாக சின்னத்திரை காட்சியமைப்பானது வெள்ளித்திரையின் பக்கம் கால்பதிப்பதற்கான ஒரு பயிற்சியாகவே காணப்படுவதனை யாராலும் மறுக்கமுடியாது.

எவ்வளவு தான் கலைஞர்கள், படைப்பாளிகள் காணப்பட்டாலும் அவர்களுக்கான களம் என்பது கிடைப்பது மிகக்குறைவு ஆனால் இன்றைய எம் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் எம் தமிழ் ஊடகங்கள் இளைஞர்களின் கலை ஆர்வத்தினை நெறிப்படுத்தும் களமாக இருந்தது. செயற்பட்டுக் கொண்டு இருப்பதோடு பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்கிய வண்ணம் காணப்படுகின்றது எனவே தென்னிந்தியாவைப் போல இலங்கை கலைஞர்களின் ஆக்கமும் என்றோ ஒருநாள் வானுயர்ந்து செல்லும் என்பது உண்மை.

இன்று எத்தனையோ இளம் படைப்பாளிகள் இலங்கை சினிமாவை பிரதிநிதித்துவப்படுத்தி காணப்படுகிறார்கள். அவர்களில் ஒருவரான இன்பத்தின் வலிகள் என்ற குறுந்திரைப்படத்தை இயக்கிய நகுலேஸ்வரன் தேனுஜன் என்பவருடனான ஒரு நேர்காணல்.

**இன்று இலங்கையில் எவ்வாறு சினிமா நிலை காணப்படுகிறது?**

தென்னிந்தியாவைவிட குறைந்த நிலையில் இருந்தாலும் தற்போது வளர்ச்சியடைந்து செல்கிறது. அத்துடன் தற்காலத்தில் பல வழிகளில் இளைஞர்களின் கலைப் படைப்புக்கள் ஊக்குவிப்பதற்காக பல ஊடகங்களும், ஏனைய நிறுவனங்களும் முன்வந்துன்ன.

**சினிமாத்துறையை வளர்க்க ஊடகங்கள் எவ்வாறான முயற்சிகளை மேற்கொள்கின்றன ?**

ஒவ்வொரு இளைஞர்களின் ஆக்கங்களையும் கலைப்படைப்புக்களையும் வெளி உலகிற்குக் கொண்டுவரும் முகமாகத் தமது நிகழ்ச்சிகள் ஊடாக உதவுகின்றது. அத்துடன் அவர்களை நேரடியாக தமது கலையகத்திற்கு அழைத்து நேர் காணல்கள் மூலம் அவர்களை வெளி உலகிற்கு அடையாளப்படுத்தி குறுந் திரைப்படங்கள் மக்களின் விமர்சனத்திற்கு விடுவதன்மூலம் கலைஞர்கள் மக்கள் மனதை அறிந்து தமது ஆற்றலை விருத்திசெய்ய உதவுகிறது.

**சினிமாத்துறையின் உயர்சிக்கும் அதை வெவ்வேறு வளர்ச்சிப்படிக்குக் கொண்டு செல்வதற்கும் நிதி அவசியமா?**

கலையை வளர்ப்பதற்கு நிதி என்பது ஒரு தடையல்ல சவாலே! ஆனால் அதற்கு யுனிசெவ் போன்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன. அதுமட்டுமல்லாது இன்று பல நிறுவனங்கள் ஊக்குவிப்புக்களை வழங்கக் காத்துக் கொண்டிருக்கின்றன. இப்போது சினிமா சங்கம் என்ற ஒன்றும் உருவாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**வரும் காலங்களில் இலங்கை சினிமாவிற்கு ஒரு எதிர்காலம் உண்டா?**

கண்டிப்பாக உள்ளது. எமது நாட்டில் பல கலைஞர்கள் இருந்தாலும் சரியான வழிகாட்டல்கள் இல்லாத படியால் அவர்களை வெளிஉலகம் அறியமுடியாது இருந்தது. அத்துடன் தொழில்நுட்பவசதி குறைவாக இருந்தது ஆனால் இன்று ஊடகங்களே முன் வந்து கலைஞர்களை ஊக்குவிக்கிறது. அதுமட்டுமல்து நம் நாட்டுக்கு கலைஞர்களும் வெளிநாடுகளிற்கு சென்று சினிமாத்துறை சமபந்தமாக பயின்று வருகின்றமை மூலம் இலங்கை சினிமாவிற்கு எதிர்காலம் உண்டு என்பது தெளிவான உண்மை.

**லோ. அனற் கேசிகா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம கால இளைஞர்கள் எதிர்நோக்கும் உளப்பிரச்சினைகள்

உலகமயமாதல் சூழலில் அகப்பட்டு தடம் மாறிப் பயணிக்கும் இளைஞர்கள் மன அழுத்தங்கள் உளநெருக்கீடுகள் மனச் சோர்வு, விரக்தி, கவலை, பதற்றம், குழப்பங்கள் தாழ்வு மனப்பான்மை மற்றும் இவ்வாறான உளப்பிரச்சினைகளினால் ஏற்படக்கூடிய உடல்சார்ந்த, சமூகம்சார்ந்த பிரச்சினைகள் என இன்றைய இளைஞர்கள் அன்றாடம் ஏதோவொரு சிக்கலைச்சந்தித்தே தன்கருமங்களை ஆற்றவேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

இயந்திரமயமான இன்றைய உலகிற்குள் கலந்துகொண்டு வேலை வேலை என்று தரிககக்கூட நேரமின்றி ஓடிக் கொண்டிருக்கும் இளைஞர் கூட்டம் ஒருபுறம் அதே வேளை வேலையில்லாப் பிரச்சினையால் அவதிப்படும் இளைஞர்கள் ஏராளம்.

தற்கால சமூகத்திலுள்ள இளைஞர்களின் உளப்பிரச்சினைக்கான பிரதானகாரணிகள் ஒன்றாக இருப்பது வேலையில்லாப் பிரச்சினை கா.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரத் துடன் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி வேலை தேடிச் செல்கின்ற இளைஞர் பட்டாளம் ஒரு பக்கமும் பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்துவிட்டு வேலை தேடித்திரியும் இளைஞர்கள் இன்னொரு பக்கமாகவும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையிலான பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர் கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

தாம் சுதந்திரவானில் சிறகடிக்க வேண்டும் என்ற ஆசையினால் உந்தப்பட்டு வேலை தேடிச்செல்லும் இளைஞ்ஙள் வேலைத்தளத்தில் முதலாளிகளின் உழைப்புச் சுரண்டல் மற்றும் கட்டுப்பாடுகளினால் மனமுடைந்து போகின்றனர்.

இது இவ்வாறிருக்க, பட்டப்படிப்பினை முடித்துத் தொழிலுக்காக காத்திருக்கும் இளைஞர்கள் தாம் இதுவரை பெற்றோரைக் கஸ்ரப்படுத்திவிட்டோம் இனியாவது அவர்களை சொந்த உழைப்பில் காப்பாற்ற வேண்டும் என்கின்ற அங்கலாய்ப்பினால் தமது தகைமைக்கு குறைந்தவாறான வேலைகளை ஏற்றுக் கொள்கின்றனர். இந்நிலையானது மேலும் மன உழைச்சலுக்கு ஆளாக்குகின்றது. பலவருடங்கள் பல சவால்களுக்கு மத்தியில் பட்டப்படிப்பினைப் பூர்த்திசெய்த போதிலும் தமது தகுதிக்கேற்ற தொழில் கிடைக்காமை யானது வேலைதொடர்பான மன அழுத்தத்தினை ஏற்படுத்துவதோடு மனச் சோர்வு, விரக்தி போன்றவற்றையும் ஏற்படுத்து கின்றது.

போதைப்பொருள் பாவனை தற்கால இளைஞர்களை வெகுவாக சீர்குலைத்து உளப்பிரச்சினைகளை உண்டு பண்ணக்கூடிய காரணிகளில் முக்கிய மாக விளங்குகின்றது. இதுவே சமூகத்தில் வன்நடத்தைகள் அதிகரித்துக் காணப்பட காரணமாகின்றது. போதைப்பொருள் பாவனையினால் வன்முறைகள் வாள் வெட்டுக்களாகவும், அடிதடிகளாகவும் பெண்கள் சிறுவர்கள் மீதான துஸ்பிரயோகங்களாகவும் கொலைகளாகவும் விஸ்பரூபம் எடுத்து வருகின்றது இவ்வாறான போதைப் பொ ருள் பாவனையாளர்கள் எந்த வொரு பிரச்சினைக்கும் வன்முறையே தீர்வு என்றெண்ணிச் செயற்படுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் அவ் இளைஞர்களை உள ரீதியிலான பாதிப்புக்களுக்கு இட்டுச் செல்கின்றது.

திருமண வயதெல்லை கடந்தும் திருமணம் ஆகாமை இளைஞர்களின் மன அழுத்தங்களிற்கு பின்னால் ஒளிந்திருக்கின்ற காரணிகளுள் ஒன்றாகும். பாடசாலைக் கல்வி பட்டப்படிப்பு வேலையில்லாப் பிரச்சினைகளை எதிர்கொள்ளல் அதனைத் தொடந்து தகுதியான வேலை, கைநிறையச் சம்பளம், குடும்பத்தை நல்லநிலைக்குக் கொண்டுவருதல் என இவ்வாறான கருமங்களை ஆற்றியபின்னரே திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பது அங்கே இளைஞர்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. எனினும் சூழ்நிலை அவர்களின் முன்னேற்றத்தை காலந்தாழ்த்தி விடுகின்றது. அத்தோடு தோஷம் வரதட்சணை போன்ற விடயங்களும் வயதெல்லை தாண்டியும் திருமணம் ஆகாமைக்கு துணைபுரிகிறது.

இவ்வாறான காரணங்கள் இளைஞர்கள் மத்தியில் உளப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. இவ்வாறான இளைஞர்கள் ஒருபுறம் இருக்க இளவயது திருமணங்கள் காதல் போன்ற விடயங்களினால் குடும்பத்தை வழிநடத்திச் சொல்ல போதிய அறிவின்மை போன்றவற்றினால் அவதிப்படும் இளைஞர்களும் உள்ளனர். எனவே இவ்வாறான காரணங்கள் இளைஞர்களின் மனரீதியான பிரச்சினைக்கு இட்டுச் செல்கின்றன.

இவற்றைவிட இளைஞர்கள் மீதான பெற்றோர்களின் அளவுக்கதிகமான கட்டுப்பாடும் நிபந்தனைகளும் இவர்களை உளப் பிரச்சினைக்கு உள்ளாக்கி அவர்களை பொருத்தப்பட்டவர்களாக மாற்றக் கூடியது.

இளைஞர்கள் எதிர் நோக்கி வருகின்ற உளரீதியான பிரச்சனைக ளை எவ்வாற வகையில் தீர்த்துக் கொள்ளமுடியும் என்கின்ற வினாவிற்கு இதம் நிறு வனத்தில் உளவளத்துறையாளராகப் பணிபுரியும் திரு.ச. சுரேந்திரன் என்பவர் பதிலளிக்கையில், இளைஞர்கள் தமக்கு விருப்பமான விடயங்களில் ஆர்வத்தை செலுத்துதல் மற்றும் குடும்பச்சூழல் என்பன அவர்களது மன நிலையில் மாற்றங்களைக் கொண்டிருக்கக்கூடியன. எனவே ஆரோக்கியமான மனநிலைக்கேற்ப தமது சூழலை அமைத்துக் கொள்ளல் - ஓய்வு நாட்களில் மனத்திற்கு இதமளிக்கக்கூடிய இடங்களுக்கும் செல்லுதல், இயற்கையினை ஓரளவேனும் இரசிக்கப் பழகுதல் தனக்குப்பிடித்தமான ஆரோக்கியமான விடயங்களில் கவனம் செலுத்துதல், சரியான உணவுப் பழக்கங்கள் மூலமாக உளப் பிரச்சினையைக் குறைத்துக் கொள்ளமுடியும்.

மேலும் சரியான உளவளத் துணையாளரின் உதவியுடன் குறித்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எவ்வாறு அணுகுவது என்பது தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுதல் சிறந்தது. மற்றும் ஒரு உளவளத்துணையாளர் குறித்த இளைஞர்களுக்கு தமது பிரச்சினை குறித்து உணரச்செய்து அவரது மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தித் தாமே ஒரு ஆரோக்கியமான தீர்வினை எடுக்கக்கூடியவாறு ஆற்றுப்படுத்தல் சிறந்தது.

இளைஞர்கள் மிக உற்சாகமானவர்கள் அவர்களால் சமூகத்திற்கு ஏராளமான பணிகளைச் செய்யமுடியும் இத்தகைய சத்திமிக்க மனித வளவாளர்களை உளப்பிபரச்சினையால் மூழ்கடித்து நலிவடைந்து போகாமல் அவற்றை ஆரோக்கியமான செயற்பாடு களுக்குப் பயன்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். வெறுமனே உடல் ஆரோக்கியம், தேக பலம் என்பவற்றில் மாத்திரம் அக்கறை கொள்ளுவதால் எமது இளைஞர்களிடையே ஆரோக்கியமான



விருத்தியை எதிர்பார்க்க முடியாது எனவே உளவளம் தொடர்பிலும் போதியளவு அக்கறை அவசியமாகும்.

சு.நிஷாந்தினி

# போதைப்பொருள் பாவனை



இன்றைய இளைஞர்கள் மத்தியில் அதிகரித்து வருகின்ற பாரிய பிரச்சினையாக போதைப் பொருள் பாவனை உருவெடுத்துள்ளது. நாகரிகத்தின் உச்சக்கட்ட வெளிப்பாடாக இளைஞர்கள் இதனை கருதுவதோடு நண்பர்கள் மத்தியில் தன்னைத் தக்கவைக்கும் தகுதி என்னும் தோற்றப்பாடாகும். சமுதாய வன்முறைகள், கலாசார முறை கேடுகள் போன்ற சீரழிவுக்கு வித்திடுவதாகவும் இவை அமைகின்றது.

புகைத்தலைவிட போதைப் பொருள் பாவனை இன்று அளவில் பெருகி வருகின்றது. புதியனவற்றை அறியும் ஆர்வத்தால் பகுத்தறியாது அனைத்தையும் உடனே உள்வாங்கிக் கொள்பவர்களாகவும் முதிர்ச்சித் தன்மை சற்றுக் குறைந்தவர்களாகவும் இளைஞர்கள் காணப்படுவதால் அவர்களையே இலக்குவைத்து திட்டமிட்டு திணிக்கப்படுகின்றது இதனால் சிந்தனைத் திறன்கள் மழுங்கடிக்கப்படுவதுடன் ஒரு நாட்டின் பலம் பலவீனமாக மாறுகிறது எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது.

போதைப் பாவனையால், கல்வியிலே அதிகளவு அக்கறை செலுத்தமுடியாத நிலை உருவாகின்றது. மனக்கட்டுப்பாடின்மை, உணர்வுகளுக்கு அடிமையாதல், நிலையான தீர்மானமெடுக்கும் ஆற்றலையும் இளையோர் இழக்கின்றனர். அத்துடன் விரைவிலேயே இளமைத் துடிப்பை இழந்து முதுமைத் தோற்றத்தைப் பெறவும் இவை வழிசமைக்கும்.

வளமான நாளைய இளைஞர்களை வழி நடத்துவதும் பாதுகாப்பதும் அரசினது மட்டுமன்றி சமூக ஊடகங்கள், சமூக சேவைஅமைப்புக்கள் மற்றும் ஒவ்வொரு தனிநபரது கடமையாகும். என்பது இங்கு உணரப்படவேண்டும்.

போதைப்பொருளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக தெளிவான முறையிலே இளைஞர்களிடம் கருத்தரங்குகள், ஆலோசனை வழிகாட்டல்கள் என்பன நடைபெறவேண்டும். குறிப்பாக இளையோர் மத்தியில் சுயமதிப்பீடு, எதிர்காலம் பற்றி சிந்தித்தல், பிரச்சினையை எவ்வாறு கையாள்வது (போதைப் பொருள் பாவனை பிரச்சினைக்கு தீர்வல்ல) என்பன தொடர்பாக பயிற்சிகள் அளிப்பதன் மூலம் ஓரளவேனும் அவர்களது எதிர்காலக் கனவு, இலட்சியங்களைக் காப்பாற்ற முடியும். இது தொடர்பில் விழிப்புணர்வு அளிக்கப்பட்டாலும் அவை உரிய முறையில் சென்றடைய வேண்டும்.

போதைப் பொருள் பாவனைக்கு ஆட்பட்டு அவதியுறும் இளைஞர்களை சீர்படுத்த புனர்வாழ்வு அளிக்கும் நிறுவனங்கள் தேவை. இவ்வாறான இளைஞர்களுக்கு எவ்வாறு ஆலோசனைகூறுவது வழிநடத்துவது எவ்வாறு என்பது தொடர்பில் ஆலோசனை வழிகாட்டிகளுக்கு பயிற்சி அளிப்பதும் காலத்தின் தேவையாகக் கருதப்படுகின்றது.

தற்போதைய சூழலில். பாடசாலை மாணவர்கள் புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கு அதிவிசேட ஊடகங்கள் கட்டுப்பாட்டு சபையுடன் இணைந்து எதிராகப் பல விழிப்புணர்வு செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன் ஊடகங்கள் அதிவிசேட பங்களிப்புச் சபையுடன் இணைந்து செய்வது பாராட்டத்தக்கது அரசும் கூட இளம் சமுதாயத்தின் நலன் கருதி அமுல்ப்படுத்தி வருகின்றது. ஜனாதிபதி மதுபான நிவாரணப் பிரிவின்கீழ் பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய மாற்றம் நிரந்தரமாகத் தேவை இதனால் எதிர்கால சந்ததியினர் பற்றி அச்சம் கொள்ளும் நிலை உருவாகாது. எதிர்காலம் வளம்பெற சமூக மாற்றத்திற்கு குரல் கொடுப்போம் நாளைய உலகம் நம் இளைஞர் கையில் இவ் எதிர்பார்ப்பிற்கு ஏற்றவாறாக இவர்கள் செயற்பாடுகள் மாற்றமடையும்

ஜி.பிறிஸ்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொருளாதார வளர்ச்சியில் தடம்பதிக்கும்

# இளைஞர்கள் தடைகளும், தாண்டல்களும்

பொருளாதார வளர்ச்சி என்றால் என்னவென்று பார்க்கும்போது அது மொத்த உள்நாட்டு உற்பத்தியை நிலையான விலைகளில் கணிப்பிடப்பட்டு தொடர்ந்து பெறப்படுவதாகும். இந்தப் பொருளாதார வளர்ச்சியில் இளைஞர்களின் சக்தி பலமே இன்றியமையாததாகக் காணப்படுகிறது. இருப்பினும் இளைஞர்களின் பங்களிப்புக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தடைகளும் சவால்களும் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

நம் நாட்டு இளைஞர்களைப் பொறுத்தவரை அவர்கள் பொருளாதார வளர்ச்சிக்கு துணை நிற்கவேண்டுமானால் அதற்கு கல்வித்துறை என்பது மிகமுக்கியமானதாகும். இதை இலங்கையினை மையமாக வைத்துப்பார்க்கும்போது இலங்கையின் கல்விக கொள்கை இலங்கையின் பொருளாதார வளர்ச்சியுடன் ஒத்துப் போகவில்லை. இது இறக்குமதி செய்யப்பட்ட கல்விக் கொள்கையாகக் காணப்படுவதால் சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகிறது. இதனால் இது இளைஞர்களின் பொருளாதார வளர்ச்சியின் பங்களிப்புக்கு சவாலாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் கடந்த காலங்களில் சுதந்திரத்துக்குப் பிற்பாடு இலவசக்கல்வி கொண்டு வரப்பட்டது. இதில் படித்துப் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு வேலைவாய்ப்பு தொடர்ச்சியாகத் தடையின்றி கிடைக்கிறது. ஆனால் 65 வயதுக்குப் பிறகு வேலை வாய்ப்பைப் பெறுவது கடினமான செயலாகவே காணப்படுகிறது. ஆகவே படித்த இளைஞர்கள் மத்தியில் வேலை வாய்ப்புப் பிரச்சினை ஆங்காங்கே தலைகாட்டத்தான் செய்கிறது. இவ்வாறான சவால்களுக்கு இளைஞர்கள் முகம் கொடுக்கின்றபோது பொருளாதாரவளர்ச்சியும் தடைப்படத்தான் செய்கிறது.

மேலும் இந்த வேலையில்லாப் பிரச்சினை சமூகத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்துவதாகவும் காணப்படுகிறது. அதாவது தெற்கில் சிங்களப்பகுதியில் JVP என்ற வகையில் இளைஞர்கள் போராட்டங்கள் போய் சேகுவாரப் பிரச்சினை தோன்றி அதிகமான இளைஞர், யுவதிகள் இறந்து போனார்கள். அதே போலவே வடக்கு மற்றும் கிழக்கில் போராட்டத்துக்கென அதிகமான இளைஞர்கள் சேர்ந்து இறந்தார்கள். இதனை பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கேற்கும் இளைஞர்களை அழிவுறச் செய்த சம்பவம் என்றே கூறவேண்டும்.

மேலும் இளைஞர்களால் விவசாயத்துறை, மீன்பிடித்துறையில் ஈடுபட்டு பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கும்போது இங்கு பருவகால வேலையின்மை காணப்படும். அதாவது இந்த வேலை செய்பவர்களுக்கு ஒரு பருவத்தில் வேலையிருக்கும் இன்னொரு பருவத்தில் வேலையிருக்காது. இவ்வாறான வேலையின்மையாலும் இளைஞர்கள் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும்போது அங்கும் சவால்கள் எழத்தான் செய்கின்றது.

இவ்வாறான சவால்களையும், பிரச்சினைகளையும் தாண்டி இளைஞர்கள் பொருளாதார வளர்ச்சிக்கு துணைநிற்கத்தான் செய்கிறார்கள். இதைப்பார்க்கும்போது இளைஞர்களை கற்ற இளைஞர்கள், கற்காத இளைஞர்கள் எனப் பார்க்கமுடியும். இவர்களது இரண்டுவகை சார்ந்த தொழில் நடவடிக்கையுமே உழைப்பாகவே காணப்படுகிறது. இலங்கையின் கிராமப் புறங்களில் கூலிவேலை செய்வது, அறுவடை செய்வது போன்ற நடவடிக் கைகள்யாவும் உடல் உழைப்பாகவே காணப்படுகிறது. இதற்கு கல்விவளம் பெரிதும் தேவையில்லை.

ஜே.வி.பி மற்றும் வடக்கு கிழக்கு போராட்டத்துக்கெனத் தம்மை ஈடுபடுத்திய இளைஞர்கள் அதனையும் தாண்டி எவ்வாறு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்கிறார்கள் என நோக்கினர் அது பின்வருமாறு அமையும் இந்தப் போராட்டங்களினால் வேலையில்லாமல் போனவர்கள், அங்கவீனமானவர்கள் அகதி அந்தஸ்து என்ற ரீதியில் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு வேலை செய்கின்றார்கள். இவ்வாறான இளைஞர்களின் உழைப்பும் இலங்கைப் பொருளாதார வளர்ச்சியில் பங்களிப்புச் செய்கின்றது. இதைவிட நம்நாட்டு இளைஞர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று உழைக்கும் போதும் அவர்களுடைய பண வருமானமும் ஒருவகையில் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்வதை நம்மால் அறிய முடிந்ததே.

இவ்வாறு நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு இளைஞர்கள் பங்களிப்பினைச் செய்யும்போது அதற்கு தடைகள் பல காணப்பட்டாலும் அதனையும் தாண்டி நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு அவர்கள் செய்து வருகின்ற பங்களிப்பும் நம்மால் மறுக்கமுடியாத ஒன்றாகும்.

**ச.பிரசாந்**

## பல்கலை மாணவர்களைத் தடம்பதிக்க வைக்கும்

# கவிதா ஆற்றல்

இன்றைய மாணவர்கள் நாளைய உலகின் சக்தி என்று அழைக்கப்படுகின்றனர். காலம் காலமாக மாணவர்களுக்குள் புதைந்து கிடக்கின்ற ஆற்றல்களை வெளிக்கொணருவதற்காக பலகளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாடசாலை மட்டத்திலிருந்து பல்கலைக்கழகங்கள்வரை பலபோட்டிகள் நடை பெறுகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அந்த



வகையில், இக் கவிதா ஆற்றலும் பலம் வாய்ந்த வொன்றாகக் காணப்படுகின்றது.

இக்கவிதா ஆற்றல் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நடாத்தப்பட்டு வந்த வொன்றாகக் காணப்படுகின்றது. யாழ். பல்கலைக் கழகத்தினைப் பொறுத்தவரையில் வரலாற் றுத்துறையினைச் சேர்ந்த பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்கள் தலைமைவகித்த பங்கினை நாம் அவதானிக்கமுடியும். இந்நிகழ்வு நேத்ரா நிகழ்வலையில் அனைவராலும் பார்வையிடக்கூடியதாக இருந்தது.

எமது சஞ்சிகையின் பொருட்டு தரவு திரட்டுவதற்காக இந்நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களை சந்தித்து கலந்துரையாடியபோது அவர்கள் பல் வேறு கருத்துக்களை நம்முடன் பகிர்ந்து கொண்டார்கள். இந்நிகழ்வு தற்போது நடை பெறாதிருப்பது தமக்குக் கவலையளிப்ப தாகக் கூறியிருந்தார்கள். இப்போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசாக: 100,000 உம், இரண்டாவது பரிசாக: 75,000 உம், மூன்றாவது பரிசாக: 50,000 உம் வழுங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதொரு அம்சமாகும்.

வெற்றிபெற்ற இப்பல்கலைக்கழக மாணவர்களுடன் கலந்துரையாடிய போது வெற்றிபெற்ற மாணவர்களின் நிரல் மிகவும் பெரிதாகவே காணப்பட்டது. இக்கவிதா ஆற்றல் நிகழ்வில் பல போட்டிகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இங்கு ஆக்கத்திறன் மிக்க கிராமிய பாடல்கள்:

- ஓவியம்
- குழு இசை
- தனி இசை
- கிராமிய நடனம்
- கட்டுரை
- ஓவியம்
- கவிதை
- அறிவிப்பாளர் தெரிவு

எனப் பல போட்டிகள் இடம்பெற்றிருந்தது.

ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு மாணவர்கள் வெற்றி பெற்றமையினைக் குறிப்பிட்டுக் கூறமுடியும். அந்த வகையிலே,

**2012 ஆம் ஆண்டு**

இ.நிஷாதரணி தனி நடனத்தில் கலந்து கொண்டு இறுதிச்சுற்றில் முதலிடத்தை



யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைபீடத்தில் 2013ஆம் ஆண்டு குழுநடனத்தில் முதலாம் இடம்பெற்ற மாணவிகள்.

தட்டிச் சென்றார்.

**2013 ஆம் ஆண்டு**

குழு நடனத்தில் இறுதிச்சுற்றில் முதல் இடத்தைத் தட்டிச் சென்றவர்களாக, R.நிஷாதரணி, S.பவிதா, R.பகிப்பிரியா, S.பிரியந்தினி, T.திஷாங்கனி, T.தர்சினி, P.சஜிகா, S.அகன்ஜா, V.வரண்யா கௌரி, K.திஷான் போன்றோர் குறிப்பிட்டுக் கூறக் கூடியவர்கள் ஆவார்.

**அடுத்து அதே ஆண்டு**

தனியிசை - கிஷான் முதலிடத்தையும்

நடனம் - சு.வானதி முதலிடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து 2013 ஆம் ஆண்டே தனி இசையில் தி.ரஞ்சித்குமார் இரண்டாவது இடத்தினையும் பெற்றுள்ளார்.

**2014 ஆம் ஆண்டு**

ஓவியப் போட்டியில் பா.புஸ்ப காந்தன் முதலாவது இடத்தினைப் பெற்றுள்ளார். மேலும் சி.நிரோஜன் நாட்டார் பாட லில் முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

ஒவ்வொரு போட்டிகளிலும் கலந்து கொண்ட ஒவ்வொரு மாணவர்களும் தாம் வாங்கிய பரிசுப் பொதிகளைக் கூறி மகிழ்ச்சி அடைந்துள்ளதுடன் தாம் தாம் அந்நிகழ்வில் பங்கு பற்றியமையினை உறுதிப்படுத்தும் முகமாய் சான்றிதழ் வழங்கியிருந்ததாகவும் குறிப்பிட்டு இருந்தனர்.

இம்மாணவர்களுள் ஒருவரான வி.நிரோஜன் என்பவரை நாம் ஆழமாக, பேட்டி கண்டபோது, அவர் கூறியதாவது,

எத்தகைய அளவிற்கு அவர்கள் வெற்றி பெற்றமையினை மகிழ்வோடு கூறினாரோ அதே அளவிற்குக் கவலைப்படுகின்றார்கள். ஏனென்றால் தற்போது இப்போட்டி அரசினால் முன்னெடுக்கப் படுவதில்லையென்று. இப்போட்டியின் முக்கியத்துவம் தொடர்பாய் அவர் கருத்துத் தெரிவிக்கும் போது, "இதுவொரு போட்டி மட்டுமல்ல, மாணவர்களது திறமையினைக் கண்டறியும் ஆடுகளமாகவே" காணப்பட்டது எனக் கூறியிருந்தார். இவர் தாம்பெற்ற அனுபவங்களை நம்முடன் பகிர்ந்து கொண்டதிலிருந்து இப்போட்டி எவ்வளவு முக்கியமானது என்பதனை நாம் விளங்கிக்கொண்டோம். இக்காலத்தில் இத் தகைய போட்டிகள் நடைபெறாது இருப்பதானது எமக்குக் கவலையினை யே தருகின்றது. இன்று இல்லாவிடினும் இனி வரும் காலங்களிலாவது இத்த கைய போட்டிகள் நடைபெற வேண்டுமெ ன்பது அங்கிருந்து அகன்று சென்ற நம் அனைவரதும் வேணவாவாய் இருந்தது.

**யோ.ஹாசினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களும் பெண்களும்



**இன்றைய காலநிலையினைப் பொறுத்தவரை கதிரவனின் பிரசன்னம் வேறொரு உரு கொண்டாற்போல் வெப்பம் மிகுந்திருந்தது. தொடர்ச்சியான விரிவுரையின் பின் கிடைத்த ஓய்வினில் மதிய உணவினை முடித்துவிட்டு நம் ஊடக விரிவுரை மண்டபத்தினுள் அடுத்த விரிவுரைக் காக முன்கூட்டியே வந்து சேர்ந்தோம். கூடியிருந்து உலக விபரணம் பேசுவதிலும் ஒருவரை ஒருவர் கலாய்ப்பதிலும் நமது வகுப்பறை என்றுமே சலித்தது இல்லை. முதலில் சௌமியா (யாழின் பிரபல தனியார் தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் பணியாற்றுகின்றார். உலக நிகழ்வுகள் அனைத்தனையும் கையில் வைத்திருக்கும் ஊர்க் குருவி இவர்) தொடக்கி வைத்தார் வினாவினோடு...**

**சௌமியா:** நெருங்கிக்கொண்டிருக்கும் புதுவருடத்திற்கு நாம் எல்லோரும் சேர்ந்து தொலைக்காட்சி அலைவரிசையில் நிகழ்ச்சி செய்வோமா?...

**தேவயசி:** (இவர் எப்பவுமே முந்திரிக்கொட்டைதான். அனைத்தையும் நம் வகுப்புத் தோழர்களை நம்பி தன்தலையில் போட்டுக் கொண்டு பின் வேறுயாரும் உதவி செய்யவில்லையெனக் காட்டிக் கொள்ளவார் என்று மனதினுள் நொந்தபடி...) உன்னோட ஐடியா நல்லா இருக்கே... என்ன ப்ரண்ட்ஸ் நீங்க என்ன சொல்றீங்க...?

**ஜீவனா:** ஆம், நாங்க ரெடியா எப்ப எங்கே வாறது னு மட்டும் சொல்லுங்கோ... அடுத்த செக்கன்டே நாங்க அங்க இருப்பம்...

**ஜெறோமின்:** ஆ, சரி ஜீவனா: கேசிகா நீங்க பேசாமல் அமைதியாய் இருக்கீங்கள்: உங்களுக்கு விருப்பமில்லையா என்ன?

**கேசிகா:** இல்லை யசி ,ப்ளீஸ் நான் மட்டும் வரலைமா..

(வகுப்பில் அமைதியின் சின்னம் இவர்தான்: சாதுவான பெண் பிள்ளை: அடிக்கடி இப்படித்தான் இருக்க வேண்டுமென கேசிக்கா வைப்பார்த்துத்தான் நாம் கற்றுக்கொள்கின்றோம்)

**றொஷாரி:** ஏன் கேசிகா பெஸ்ற் இயர் முடியிரடைம். நாங்க எல்லோரும் பிரியப்போறம்... எல்லாரும் ஒன்னாய் சேர்ந்து இந்த டிவி ஷோவையாச்சும் நடத்துவமே...? வகுப்பறையில் நமக்கு மட்டும் தெரிந்த உங்களின் திறமைகளை ஊர்: உலகம் கண்டு வியக்க வேண்டாமா?... என்ன?

**கேசிகா:** இல்லை றொசாறி: எங்கட அப்பா அண்ணாக்கள் T.V ஸ்கிறீன்ல வந்தா ஏசுவாங்கள்... ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க... வேற என்னண்ணாலும் கேளுங்க செய்யிறன்... பட் இதில் மட்டும் என்னால் பார்டிசிபேட் பண்ணமுடியாது...

(ஐயகோ! பிள்ளையை இன்னும் கேட்டால் அழுதுவிடும் போல... இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு பெண்ணா...?)

(இதையெல்லாம் ஓரமாயிருந்து கேட்டிட்டு இருந்த நமது வகுப்பறை நகைச்சுவை மன்னன் ஐங்கரன் புன்னகையோடு கேசிகாவைக் கலாய்க்கத் தொடங்கினார்.)

**ஐங்கரன்:** ஆம், அது பெண்ணுக்கழகு, டிவி ஷோ எல்லாம் பெண்கள் பாட்டிசிபேட் பண்ணக் கூடாது. யசி நீயும் இருக்கியே அவளப்பார்த்துக் கற்றுக்கோ... ஹா... ஹா...ஹா

(மொக்கையா JOKE அடிச்சுச் சிரிச்சுக்கிற பழக்கம் ஐங்கரனின் தனித்துவமான பண்புகளுள் ஒன்று)

**ஜீவனா:** உண்மைதான் நண்பிகளே...! பிளைட்ல பறக்கக்கூட விடுற நம் பாதுகாப்பு அரண்கள் மீடியாவில் வேர்க் பண்றதுக்கு யோசிச்சுத்தான் விடுகின்றார்கள்... அப்படி ஊடகத்தில் பெண்கள் பணிபுரிவது ஏன் தான் அவர்களுக்கு மட்டும் பிடிப்பதில்லையோ?

**சௌமியா:** உண்மைதான் ஜீவனா... நான் கூட உறவினர்களது வைபவங்களுக்கு செல்லும் வேளைகளில் தனியார் தொலைக்காட்சியில் புறோக்கிறாம் செய்கின்றேன் என அறிமுகப் படுத்தும் வேளைகளில் சிலர் ஆச்சரியமாய் வாழ்த்துகின்றனர். ஆனால் ஒருசிலரோ டிவிஷோல வேர்க்கா என ஒரு மாதிரியாய் பார்க்கின்றனர். ஏன் தான் பெண்கள் மீடியாவில் வேலை புரிவதில் இவ்வளவு வெறுப்போ தெரியல அவங்களுக்கு.

**பிரசாந்தி:** ம்...ம்... உண்மைதான் பாரதி கண்ட பெண்விடுதலை ஊடகத்தில் நமக்கு இன்னும் கிடைக் கவில்லைப் போலும்...

**ஜொய்சி:** அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு... என்ற வார்த்தையால் படிக்கத் தொடங்கிய நம்மவர்களுக்கு (பெண்களுக்கு) இனிப் "பெண்களுக்கு சவாலான ஊடகத்-துறை" எனவொரு புது மொழி வந்தால் தான் பெண்களும் ஆவேசத்துடன் ஊடகத்துறை நோக்கித் திரும்புவார்கள் போலும்...

**அனுராஜ்:** முன்னைய பெண்கல்வி மறுக்கப்பட்ட தமிழ் சமூகத்தின் வாழ்வியலில் பெண்கள் அச்சு ஊடகத்தின் பயனாளர் களாக இருப்பதற்கே முடியாத சூழல் நிலவி இன்று பெண்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவு தொலைவினை எட்டியுள்ளனர்... அதே போன்றுதான் இனியும் பெண்களின் ஊடகப்பிரவேசம் அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்படக்கூடும்...

(ம்....ம்....அனுராஜ் பெண்கள் அணிக்கு ஆறுதல் பகர்கின்றார்)

**பிறிஸ்கா:** ம்...ம்... உண்மைதான் அனுராஜ்.... சிறுசிறு கிராமங்களிலே சிதறுண்டு பரவிக்கிடந்த மக்கள் கூட்டமானது பொதுசனம் என்ற தொகுதி உணர்வின்றி குழுக்களாக இயங்கின. ஒவ்வொரு கிராமமும் பெருமளவிற்கு தன்னிறைவு உடையதாய் ஏனைய கிராமங்களுடன் தொடர்பின்றி காலங்காலமாய் இருந்து வந்துள்ளது. இத்தகையதொரு சமுக சூழலில் ஒரு வெகுஜன ஊடகத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பற்றியும் அதில் பெண்களைத் தொடர்புபடுத்திப் பார்ப்ப தென்பதும் முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடு வதாகவே அமையும்.

**கௌசிகன்:** இருந்தாலும் பிறிஸ்கா ஒருசில முற்போ க்கு எண்ணம் கொண்ட ஆண்களுக்கு வாய்க்கப் பெற்ற மகளோ, மனைவியோ கல்விகற்கத் தலைப் பட்டுள்ளனர். ஆனாலும் பொது மக்களுடனான தொடர்பு வெகுஜனத்துடனான உறவு பெண்களுக்கு மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருந்தது.

**காசினி:** ஆம் அப்படித்தான் இருந்திருக்கினம் போல!

**கபில்ராஜ்:** ஆசியாவில் முதல் பெண் பிரதமரை யும், பிரித்தானியாவின் குடியேற்ற நாடுகளில் சர்வஜன வாக்குரிமை பெற்ற முதல் நாடும் இலங்கையே... ஆனால் வெகுஜனமயப்படுத்தலில் இருந்து பெண்கள் தள்ளியே வைக்கப்பட்டனர்.

(இவ்வேளை மாதத்தில் கிழமையில் ஒரு தடவை சகாக் கள் நலம் தரிசிக்க வரும் சுலக்சன்
காஞ்சனா-2 படம் பார்த்துவிட்டீர்களா...? என்ற வினாவுடன் உள்நுழைந்தார்)

**சுலக்ஷன்:** என்ன படம்... அருமையோ அருமை... ஆனாலும் பாருங்கள் பேய் என்று வந்துவிட் டால் அது பெண்வேடத்துக்குத்தான் கச்சிதமாய் பொருந்து கிறது... காஞ்சனாவில் திருநங்கை சரத்குமார் சேலையுடுத்தி பெண்... ம்...ம்.... பெண்ணுக்கும் பேய்க்கும் தான் என்ன வொரு ஒற்றுமை... பெண்களைக் கண்டால் பேயும் இரங்குமென்று சும்மாவா சொன்னார்கள்...?

(நம் பெண்களின் கொலை வெறிப்பார்வையை சுலக்சன் கண்டுகொண்டிருக்க வேண்டும்.. அத்துடன் மௌனமானார்)

**நிஷா:** சுலக்சன் நீ எக்ஷாம் டைம் நோட்ஸ் வாங்க எங்களிட்டைதான் வரனும்... அப்போது பேயை பெண்வடிவில் சினிமாவில் மட்டுமில்லை... நேரிலையும் பார்ப்பாய்...

(அனைவரது சிரிப்பொலியும் பலத்து பின் அடங்கு கின்றது)

**டயானந்:** அட அட சும்மா இருங்க. பெண்களைப் பொறுத்தவரை ஊடகப் பிரவேசம் என்பது பாராட்டப்பட வேண்டியதுதான்... ஆனால் ஊடகத்தினுள் பணிபுரிய விரும்பும் பெண்கள் தமக்கெனவொரு வரையறை யினைப் பின்பற்ற வேண்டும்... அதுவும் காமெரா முன்தோ ன்றும் போது ஆடை விடயத்தினைக் கவனத்திற் கொள்ள வேண்டும். தமிழ்க் கலாசார உடைகளைத் தெரிவுசெய்து உடுக்க வேண்டும். மேலைத்தேயக் கலாசாரம் எனும் பெயரில் நமது கலாசாரத்தைப் புறந்தள்ளிவிடக்கூடாது.

**உனைஸ்:** உண்மைதான் டயானந்த், இதோடு பெண்கள் பாதுகாப்பாய் மீடியாவில் நிலைத்து நிற்கக்கூடிய சூழ்நிலையும் உண்டாகும். புறக்காரணிகள் மீடியாவில் அவர்கள் சாதிப்பதற்குப் பிரச்சினையாகவும் அமைந்து விடாது.

**கீர்த்தனா:** ம்... ம்... உண்மைதான் தோழர்களே! நாம் நமக்கென ஒரு எல்லையினை வகுத்துக்கொண்டு முன்னேற்றப் பாதையினைநோக்கி நகருவோமாயின் மற்றைய பெண்களுக்கும் வழிகாட்டியாய் இருக்கமுடியும்... பெண்களை இத்துறையில் ஊக்குவிக்கவும் இயலும்...

**அருண்:** ஓகே ப்ரண்ட்ஸ் சொல்லுங்க: நியூ இயர்க்கு டிவிஷோ செய்ய எல்லோரும் வாறதுதானே...? அந்தக் காலத்தி லேயே மேல்தட்டு வர்க்கப்படித்த பெண்கள் ஊடகத்தில் தமது ஆக்கங்களைப் பிரசுரித்து இருக்கின்றனர்.

**சௌமியா:** நேற்று நான் தொலைக் காட்சி நிகழ்ச்சிக் காக அலுவலகம் சென்றிருந்த வேளை ஒரு கட்டுரை அங்கிருந்த நூலில் வாசித்தேன்... அதில் நடே சய்யரால் நடத்தப்பட்ட தேசபக்தன் இதழில் அவரது மனைவியான மீனாட்சியம்மாள் பல கட்டுரைகளை அந்தத் தடைகளையும் தாண்டி அந்தக் காலத்திலேயே எழுதி இருந்தாரென வாசித்தேன்... அந்தக் காலத்தில் அவரே அவ்வாறு துணிவுடன் கரம்பிடித்த நாயகனின் உதவியியோடு எழுது கோலை கரம்பற்றியவேளை, எமது ஆற்றல்களினை வெளிச்சத் துக்குக் கொ ண்டுவர நாம் ஏன் இந்த ஷோவினை முன்னின்று நடத்திமுடிக்க முடியாது...? நமது திறமையும் வெளிச்சத்துக்கு வரும்... பெண்கள் வெ-குஜன ஊடகங்களில் பயமின்றி தடம்பதிக்க நாம் முன்னு-தாரணமாய் இருந்ததாயும் அமையும்...

**கேசிகா:** ஓகே... சௌமி நானும் வருகின்றேன்.. வெற்றி கரமாய் செய்து முடிப்போம்.

**அனைவரும்:** ஆம் சௌமி நாங்கள் அனை-வரும் செய்து முடிப்போம்

**ஐங்கரன்:** பெண்கள் அணி புறப்பட்டு விட்டது... நீண்ட பயணத்தை நோக்கி... வாழ்த்துக்கள்... செல்லுங்கள் வெற்றியுடன் மீளுங்கள்...

**சுலக்ஷன்:** (தலையைச் சொறிந்தவாறு) இனியும் நான் லெக்சர் கட்பண்ணமாட்டேன்... லெக்சர்தான் விளங்கு தில்லனா நீங்க கதைக்கிறதும் விளங்குதில்லையே...:

**ஜீவனா:** உனக்கு பிறகு விளக்கமா சொல்லுறம்... மிஸ் வாறா... இவ்வளவு லெக்சர்ஸ்க்கும் வராததுக்கு என்ன காரணம் சொல்லலாம்னு யோசி...

**சுலக்ஷன்:** காலை நொண்டி நொண்டி நடப்பே-னே...? ப்ரண்ட்ஸ்ட பேர்த்தே பார்ட்டில கதிரை கால்ல விழுந்திட்டு... உடனடி ஐடியாக்களுக்கு என்னை தொடர்பு கொள்ளுங்கள்...

அனைவரும்: அடப்பாவி நல்ல நடிகன் நீ... வடிவே லுக்குபின் நல்ல காமடியன் நீ மட்டுமே...

**வை.ஜீவனா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் நாடுகளில் வாழும் இளைஞர்களின் இன்றைய நிலை

புலம் பெயர் நாடுகளில் வாழும் இளைஞர்களின் வாழ்வு இன்று பல இன்னல்கள் மற்றும் சவால்களைக் கொண்டதாக காணப்படுகின்றது. இவர்களது வாழ்க்கை போராட்டமும் அமைதியற்றதாகவும் ஓர் சுயஎண்ணம் அற்றதாகவும் காணப்படுகின்றது.

இவர்கள் இலங்கையின் யுத்த மாற்றமும் பொருளாதார காரணிகளின் தூண்டுதலால் தமது சொந்த மண்ணை இழந்து சொந்த நாட்டைவிட்டு பிற நாடுகளுக்கு தமது உணர்வலைகளை சுமந்து கனவுகளினை புதைத்து விட்டு புலம் பெயர் அகதிகளைாய் வெளிநாடுகளுக்கு சென்று இன்னல்ப்படுகின்றனர்.

தாம் நேசித்த தாய் நாட்டைவிட்டு தங்கள் குடும்ப மற்றும் உறவினர்களின் நலனுக்காய் தங்கள் உணர்வுகளினையும் விருப்பு வெறுப்புக்களினையும் மறைத்து அந்நிய நாட்டில் அகதிகளாய் அடிமைப்பட்டு வாழ்கின்றனர்.

அண்மைக்காலமாக கடற்பயணம் ஊடாக சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குக் கடற்பயணம் மேற்கொள்ளப்படுவது அதிகரித்துக் காணப்படுகிறது.

இது தொடர்பாக இவர்கள் அறிந்திராமலும் உயிர் ஆபத்துமிக்க கடற்பயணம் எனத் தெரிந்தும் பலர் அவுஸ்திரேலியாவுக்கு அதிகளாய் சென்றனர்.

புலம் பெயர் நாடுகளுக்கு சென்று அங்கு தனித்து இருக்கும் நிலை மற்றும் இளைஞர்களின் நிலை தொடர்பான எனது கட்டுரைக்கு விடயங்களினைப் பெற அண்மையில் படகின் மூலம் அவுஸ்திரேலியா சென்று இன்று பப்புவானி தீவில் உள்ள பிரதேசத்தவர் ஒருவருடன் உரையாடிய போது அவர் பின்வருமாறு கூறுகின்றார்.



**ரவீந்திரன் இந்துதாஸ்** - அவுஸ்திரேலியா

நான் எனது நாட்டின் யுத்த சூழ்நிலைகள் மற்றும் எனது குடும்ப பொருளாதார வீழ்ச்சி காரணமாக வெளிநாடு செல்ல வேண்டி ஏற்பட்டது.

இங்கு என்னுடன் இலங்கையின் பல்வேறு இடங்களிலும் இருந்தும் இளைஞர்களின் வருகையினை நாம் கண்டு கொள்ள முடிகின்றது.

நான் இங்கு எனது குடும்பத்துக்காக தனியே இருந்து ஓர் இயந்திரம் போல தொழில் செய்கிறேன். எனது பெற்றோரின் இன்ப, துன்பம், சகோதர சகோதரிகள் போன்றவர்களின் உணர்வுகளினை உணராமல் அதன் புகைப்படங்களுடனேயே வாழ்கிறேன்.

இங்கு எமது பண்பாட்டினை பின்பற்ற முடியாதவனாகவும் அவர்கள் சமயங்களினை பின்பற்றுவோனாகவும் உணர்வற்ற ஓர் ஜடம் போல்வாழ்கிறேன். இவ்வாறாக நண்பர் இந்துதாஸ் விரக்தி மற்றும் தனிமை நிலையினை வெளிப்படுத்தும் உணர்வு மிக்க பிரச்சினை பேச்சினை மேற்கொண்டார்.

இந்த வகையில் பல்வேறு யுத்த மற்றும் பொருளாதார காரணிகளுக்காக புலம் பெயர் அகதிகளாக வெளிநாடு சென்று வேலைபார்க்கும் எம்நாட்டு இளைஞர்கள தமது உணர்வுகளை புலம்பெயர் நாடுகளிலேயே புதைக்கின்றனர்.

**பு.ஐங்கரன்**

# அதிகரித்துவரும் இளையோர் தற்கொலை



இளம் பருவம் என்பது எவ்வித பயமுமின்றி எதையும் செய்யத்துடிக்கும் பருவமாகும். ஆகவேதான் தற்கொலையும் அதிகம் செல்வாக்குச் செலுத்துவதும் இளந்ததலைமுறைகளிடையேதான் இத் தற்கொலை எண்ணங்களை 'முறியடித்து வெற்றி பெறுபவரே சிறந்த வாழ்க்கையினை வாழமுடியும்.

இளைஞர்களை அதிகம் தற்கொலை எண்ணத்துக்குக் கொண்டு செல்பவனவாக மன அழுத்தம் குடும்ப நிலைமைகள் வறுமை, பாலியல் துஸ்பிரயோகம் மது போதைப் பயன்பாடு கல்விச்சுமை, வதிவிடம் அடிக்கடி மாறல், உயிராய் நேசிக்கின்ற உறவுகளை இழத்தல், பரீட்சைப் பெறுபேறுகள் எதிர்பார்புக்கேற்ப வராமை போன்ற பல விடயங்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக இவையாவற்றுக்கும் அடிப்படையாக மன அழுத்தமே காணப்படுகின்றது. தனிமையுணர்வே பெரும்பாலானோர்க்கு தற்கொலைதான் முடிவு என சிந்திக்க வைக்கிறது. இது பற்றி டாக்டர் பானு தில்லையம்பலம் கூறுகின்ற போது ஒரு கண நேர மனநிலைத் தடுமாற்றத்தால்தான் ஏற்படுகின்றது. எனவும் தற்கொலைஎண்ணம் ஏற்படும் போது அந்நபர் தன்னையே கேள்வி கேட்டு சீராக்கலாம் .புரிந்துணர்வுள்ள ஒருவருடன் உரையாடி தெளிவடைய வேணடும் என்கிறார்.

வட மாகாண இளைய தலைமுறையினர். கடந்த காலங்களில் அதிகளவில் தற்கொலையில் ஈடுபடுட்டுள்ளனர். எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாகின்றபோது வாழ்வில் விரக்தி ஏற்பட்டு தம் உயிரைக்கூட துச்சமாக எண்ணுகின்றனர். சிறு சிறு பிரச்சினைகளைக்கூட பெரிதாக நினைத்து தற்கொலைக்கு முயலுகின்றனர். இது முட்டாள் தனமான காரியம் இவ்வாறு தற்கொலைக்கு: முயல்பவர்கள் பிற்காலத்தில் சிந்திக்கும்போது அது அற்பமானவிடயம் என்றே எண்ணத்தேன்றுகிறது.

தற்கொலைக்கு தீர்வாக நண்பர்களுடன் கலந்து பேசுதல், எதிர்காலம், குடும்ப நிலைமைகள் பற்றி சிந்தித்தல், விழிப்புணர்வு பெறுதல். குறிப்பாக அப்பிரச்சினையிலிருந்து மீண்டு புதுவாழ்வு வாழ்ந்து காட்டுவேன் என்ற குறிக்கோளை தற்கொலைக்கு முயலுவோர் தீர்மானித்தல் வேண்டும். அல்லது உளநல ஆற்றுப்படுத்தலாளர்களால் ஆற்றுப்படுத்தலில் ஈடுபடுவதன் மூலம் பெருகிவருகின்ற தற்கொலையைக் குறைத்துக் கொள்ளமுடியும்.

**அ.ஜெரோமின்**

# இளைஞர்களும் விபத்துக்களும்



பல ஆண்டுகளாக நம் வடமாகாணம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுள் முக்கியமானதாக வீதி விபத்துக் காணப்படுகின்றது. வீதி விபத்தென்பது எதிர்பாராத விதமாக இடம் பெறுவதாயினும் அது ஏற்படுத்தும் விளைவு பாரதூரமானதாகவே அமையும் வீதி விபத்துக்கள் நாளாந்தம் யாழ்ப்பாண மாவட்டத்திலே அதிகரித்த வண்ணமாகவே உள்ளது. அதிலும் பெருமளவு இளைஞர்களே உள்ளடக்கப்படுகின்றனர்.

மோட்டார் சைக்கிள், ஆட்டோ என்பனதான் அதிகளவான இளைஞர்களால் பயன்படுத்தப்படுவதுடன் அதிகம் விபத்தை எதிர்கொள்ளும்: போக்குவரத்து சாதனங்களாக உள்ளன. இளைஞர்கள் அவர்கள் வயதின் வேகத்திற்கேற்ப வாகனங்களை வேகமாக செலுத்துகின்றனர். எப்பொழுதும் பிறரைமுந்தி வேகமாக செல்லுவதையே விரும்புகின்றனர். இதனால் எதிர்பாராத நேரங்களில் நிறுத்த முடியாது விபத்துக்குள்ளாகி உடல் அவயங்களில் எலும்பு முறிவுகள், அங்கவீனங்கள், உயிரிழப்புக்களை எதிர்கெள்கின்றனர்.


அதிகம் மது அருந்தி விட்டு வாகனங்களை செலுத்தி விபத்துக்காளாகின்றனர். நிதானமற்றதினால் தாமும் மோதுண்டு பிறரும் பாதிக்கப்படுமளவிற்கு செயற்படுகின்றனர். நாகரிகம் என்றபோர்வையில் கூட்டமாக செல்லல், புதியவகை மோட்டார் வண்டிகளை தம்மால் கட்டுப்படுத்த முடியாதனவாக இருக்கும் என அறிந்தும் வேகமாக பயணித்தல் என்பவற் றில் ஈடுபடுகின்றனர். இதனைவிட தலைக்கவசம் கூட பொலிசாருக்காக அணியவேண்டும் என்ற நோக்கில் அணிகின்ற நிலைமையை அவதானிக்கமுடிகின்றது.

தொலைபேசியில் உரையாடியபடி பயணித்தல் 'அரட்டை செய்தபடியே பயணித்தல் போன்றவற்றில் ஈடுபடுவதால் வீதி சமிக்ஞைகள் விதிகளை மீறுகின்றனர். இதனால் தம் உயிர் உடைமை மட்டுமல்லாது பிற உயிரையும் உடைமையையும் பாதிக்கச் செய்கின்றனர். குறிப்பாக பொறுமையற்று சாலை விதிகளை மதியாது பதற்றமாக செல்லுகின்றபோதும் விபத்தை எதிர்நோக்குகின்றனர்.

இளைஞர்களிலும் குறிப்பாக ஆண்களே பெரிதும் விபத்துக்குள்ளாகின்றனர். ஒரு நொடியில்கூட மரணம் ஏற்படலாம் என்பதை தற்கால இளைஞர்கள் புரியவேண்டும் தலைக்கவசம் அணிதல், வேகக் கட்டுப்பாடு, வீதி சமிக்ஞைபேணல் மது அருந்திவிட்டு வாகனம் செலுத்தாமை போன்றவற்றால்தான் விபத்தை அதிகளவில் தவிர்க்கமுடியும். அத்துடன் உயிரிழப்பையும் உடமை இழப்பையும் தவிர்த்து வாழமுடியும்.

**அ.ஜெரோமின்**

# சமூக வலைத்தளங்களும் இளைஞர்களும்




இணையத்தளம், வலைத்தளங்களின் வருகையினால் இளைய சமூகம் பல பயன்களைப் பெற்றிருக்கிறது இருப்பினும் இவையே இளையதலைமுறையினரை சீரழித்து விட்டது என மூத்தோர் புறுபுறுப்பதும் உண்டு. இலங்கையில் இளைஞர்கள் சமூக வலைத்தளங்களால் நல்லதையும் செய்யமுடியும் என எடுத்தியம்பியிருக்கின்றனர்.

கொழும்பில் வெள்ளவத்தையில் சுத்தமான தண்ணீருக்காக இடம்பெற்ற போராட்டம் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது. இப்போராட்டம் முற்றுமுழுதாக வடமாகாண மக்களின் குடிநீர்ப்பிரச்சினையை மையப்படுத்தி இளைஞர்களால் ஒழுங்கமைக்கப்ட்டு நடாத்தப்பட்டது. இது அரசியல் கலப்பற்ற நிகழ்வாகும். இம்முதல் முயற்சியே வெற்றிக்கு வழி வகுத்தது.

இதற்கு முன் கடந்த 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரின் பின் இலங்கை அணித்தலைவர் சங்ககார தலைமைப் பதவியை வகிக்க வேண்டுமென்று போராட்டம் நடாத்துவதாக முகநூலில் தெரிவித்தனர். ஆனாலும் இப்போராட்டத்தில் நான்குபேர் மட்டுமே கலந்து கொண்டனர்.

இவற்றைலெல்லாம் தாண்டி வடமாகாண இளைஞர்கள் பலர் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். சமூக வலைத்தளங்கள் வெட்டியாய் வெட்டிப் பேச்சுப்பேசும் களம், முகநூல் நேரத்தை வீணடிக்கும், தங்களால் ஆக்கபூர்வமான காரியங்களையம் செய்யமுடியுமென சுன்னாகம் நீர்ப் புரட்சிமூலம் இளைஞர் சமூகம் நிருபித்திருக்கிறது. அரபுப் புரட்சி தொடக்கம் சமூக வலைத்தளங்கள் முக்கியம் பெறுகின்றன. இம் முறையை இலங்கை இளைஞர்கள் நல்லநோக்கத்திற்காக பரிசீலித்துப் பாவிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.


**அ. றொசாறி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோர்க்கு இயற்கைவிடும் சவால்



இருபத்தியோராம் நூற்றாண்டின் கால்வாசிப் பகுதியில் காலடி பதித்துள்ள மானிடம் அறிவியல், விஞ்ஞானதொழில் நுட்ப வளர்ச்சி களுடன் எட்டமுடியா பட்டம் பறக்கும் தூரத்தில் (உயரத்தில்) வாழ்கின்றான். விரைந்தோடும் வாகனங்களும் வேர்வையோடும் மானிடர்களும் அனல் பறக்கும் காலநிலையுடனும் கழிகின்றது. கலியுகம். மனிதனால் முடியாத ஒரு குழியளவு செயலும் என்கின்ற கானல் நீர் எண்ணமும் மனப்பாங்கும் நம்மிடையே அவ்வப்போது வந்து செல்வதுண்டு. அதுதான் பொய் அங்கு இழக்கிறான் மனித பகுத்தறிவான ஆறாம் அறிவினை.





மனிதனால் வெல்லமுடியாது என்கிறது எதுவுமில்லை இயற்கை யைத் தவிர. இயற்கைக்கும் மனிதனிற் குமிடையே ஆதிமுதல் அந்தம் வரை தாய் பிள்ளை போன்ற ஒரு உறவுண்டு. அதனால் தான் பூமியை பூமித்தாய் என்பதுடன் ஆறுகள், குளங்கள் போன்ற இயற்கையின் கொடைகளை பெண்களின் பெயர்களைக்கொண்டு அழைக்கின்றோம். ஆனால் நாமோ குருவை மிஞ்சிய சீடர்களாச்சே. பூமித்தாயை விடுவோமா?

இயல்பாகவே தோன்றியது இயற்கை அதன்பின்தான் செயற்கை, மற்றையவையும் கூட, தாய் இன்றி பிள்ளையா, அதேபோல் சேய் இன்றியும் தாயாகிவிடமுடியாது. இவ்விரு இயற்கைக்கும் மனிதர் களுக்குமிடையே காணப்படும் தொப்புள்கொடி உறவினை நாம் பேணிப்பாதுகாப்பதே இக் கட்டுரையின் நோக்கம். இயற்கையின் எச்சத்தையும் மிச்சத்தையும் நுகர்ந்து நாம் வாழ்கின்றோம். இதனை அனைவரும் உணர்தல் வேண்டும். இயற்கையினைப் பாழாக்குவதனாலோ சீரழிப்பதனாலோ வரும் இயற்கையின் விளைவு மானிடர்க்கே!

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவினால் மனிதன் இயற்கையை வென்றுள்ளான். உதாரணங்களாக வட அமெரிக்கப் பகுதியில் காணப்படும் பனாமாக் கால்வாய் வெட்டியது. அமேசன் நதிக் கரைகளிலும் காடுகளிலும் மனிதன் உயிர் வாழச் சென்றது. 1969இல் நீல் ஆம்ஸ்ரோங்கினால் சந்திரனில் காலடி எடுத்து வைத்ததும். செவ்வாய்க்கிரக ஆராய்ச்சிகளும் 2020இல் குடியமர்வு திட்டம் போன்றன. எவரட்ஸ் சிகரத்தில் ஏறி சாதனை புரிந்தமை, அந்தாட்டிக்கா, பசுபிக் கடல்களில் ஆய்வு நடவடிக்கை, பாலைவன, களிமண் பிரதேசங்களில் வதிவிடங்கள் போன்றன இயற்கையை மனிதன் வென்ற சந்தர்ப்பங்கள் ஆகும். ஆயினும் இயற்கைக்கு இது ஒரு சிறிய கீறல் ஆகும். ஆனால் மனிதனின் பெரும் தடம், வரலாற்று சாதனைகளாக இவை கருதப்படுகின்றது.

இயற்கை இவற்றையெல்லாம் எளிமையாக ஏற்றுக் கொள்ளும் மானிடனின் (அளவற்ற) எல்லையற்ற செயற்பாடுகளினால் குறிப்பாக காடழிப்பு நடவடிக்கை, மண் அகழ்வு, ஆழ்கிணறுத் திட்டம், சேனைப் பயிர்ச் செய்கை, நகராக்கம் போன்ற செயற்பாடுகளினால் இயற்கை கோபமடைகின்றது. இதனால், இதன் விளைவினால் வரட்சி, அதிகளவான வெப்பநிலை, குளிர்,' மண்ணரிப்பு, நில நடுக்கம், சுனாமி போன்ற ஐம்பூத சவால்களை விடுகின்றது. இதன் இயற்கையின் சவாலினால் நாம் யாருமே பிழைத்து விடமுடியாது. உயிரிழப்பு உடமை இழப்பு என்பன பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவு ஏற்படும்.

ஒரு மனிதன் சுவாசிக்க ஒரு நாளைக்கு சராசரி $2100^3$ கொண்ட $O_2$ தேவைப்படுகின்றது. வருடத்திற்கு $766500^3$ $O_2$ தேவை. காடழிப்பதனால் $O_2$ வீதம் குறைவடைய இயற்கையில் $O_2$ வீதம் குறைவடைகின்றது. மண் அகழ்வினால் மண்ணரிப்பு, நிலச்சரிவு ஏற்படுகின்றது.

நாமே நம்தலையில் மண்ணை அள்ளிப்போடுகின்றோம். மனிதன் எவ்வளவு சவால்களையும் இயற்கைக்கு விடலாம். ஆனால் இயற்கைவிடும் ஒரு சவாலைக்கூட மானிடரினால் ஏற்க முடியாமல் போய்விடும்.

இளைஞர்களாகிய நாம் தான் நாட்டின் விடிவிளக்குகள் கலங்கரை விளக்கமும் கூட. இலட்சியமற்ற பாதையில் பயணிக்கும் இளைஞர்கள் இயற்கையில் ஓரளவேனும் கவனம் கொள்ளவேண்டும். இதற்கு முன் உதாரணமாக Dr. அப்துல்கலாம். இளமையில் மரநடுகை திட்டத்தி னை ஆரம்பித்தார். இன்று அவர் இறந்த பின்பும் அத்திட்டம் நடைபெற்று வருகின்றது.

இயற்கையை (மரம்) பழிக்காதீர்
மரம் நமக்கு அண்ணன்
அண்ணனைப் பழிக்கலாமா
பாழாக்கலாமா?
*கிளை வெட்டி நட்டால் மரமாகும்*
*கரம் வெட்டிநட்டால் உடலாகுமா?*
*இயற்கையை பாதுகாப்போம்*
*இளமையில் செய்வோம்*
**(வைரமுத்துவின் வரிகள்)**

பேராசிரியர் ரோபேட் அன்ரனி அவர்கள் தனது ஆய்வு இயற்கை கட்டுரையில் 3ஆம் போர் இயற்கையி னாலே ஏற்படும் என்றும், இளையவர்க ளாலேதான் இதனை தடுத்து நிறுத்த முடியும். எனவும் விழிப்புணர்வு கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

எனவே இளையோர் ஆகிய நாம் இனிமேலாவது இயற்கையை பேணுவோம். இழிவு. இழப்பின்றி வாழ்வோம்.

எண்ணங்களை செயற்படுத்தும் போது எளிமையான வழிகளைக் கையாள வேண்டும். இயற்கையுடன் முரண்பட்டால் இழப்பு நமக்கே.

பேரறிஞர் சேகுவரா

இன்றைய இளைஞர்கள் (சிறு வர்) நாளைய தலைவர்கள் என் கின்ற முதுமொழிக்கு இணங்க அழிந்துவரும் இயற்கையை காப்பது இளைஞர்களாகிய எங்களுடைய கைகளிலேதான் தங்கியுள்ளது. இளமைத் துடிப்பும், வேகமும் கொண்ட இளைஞர்கள் இதனைக்கருத்திற்கொண்டு இயற்கை யுடன் ஒன்றித்து வாழப்பழகுவதுடன் வாழ வைக்கவும் வேண்டும் என்பதே அனைவரினதும் ஆசையும்கூட.



த. டயானாத்


S.Shanthakumar
Proprietor
Nesan Textile
நேசன் புடவையகம்
Dealers in Textiles & Fancy Items
Tel : 0094778094462
Email : kumarvenez@yahoo.com
Main Street,
Punguduthivu


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோர் மனதில் இடம் பிடிக்குமா ஈழத்து சினிமா?

நம் நாட்டு இளைஞர்கள் ஈழத்து சினிமாவினை விடுத்து இந்திய சினிமாவினையே அதிகம் நாடுகின்றனர். இளைஞர்களிடத்தில் இந்தியத் தமிழ்ச் சினிமா இடம் பிடித்திருக்குமளவிற்கு ஏன் ஈழத்துப் படைப்புக்கள் தனக்கென ஒரு இடத்தைத் தக்கவைத்துக் கொள்ளமுடியவில்லை என்ற ஆதங்கமே நான் இச் செய்திக் கட்டுரையை வரையக் காரணமாக அமைகின்றது.

நம் இளைஞர்களில் எத்தனை பேருக்கு இந்திய சினிமாவைப் பற்றித் தெரிந்த அளவிற்கு ஈழத்து சினிமா பற்றித் தெரிந்திருக்குமோ தெரியாது. இந்திய தமிழ் சினிமா 1916 ஆம் ஆண்டு இத் திரையுலகில் காலடி எடுத்து வைத்து பாரிய வளர்ச்சி பெற்று இன்றைய நிலையை எட்டியுள்ளது. ஈழத்து சினிமா 1951 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது இருப்பினும் அது நம் இளைஞர்கள் மத்தியில் தனக்கெனவொரு இடத்தைத் தக்கவைத்துக் கொள்ளாமை கவலைக்குரிய விடயமே.

ஈழத்துப் புலம் பெயர் கலைஞர்கள் பலர் வேறு நாடுகளில் சென்று பல தனித்துவமான படைப்புக்களைக் கொடுத்து வருகின்றனர். அதுமட்டுமல்லாது பல சர்வதேச விருதுகளையும் பெற்றுள்ளனர். பிரான்ஸ் நாட்டின் கான் நகரில் வருடாவருடம் நடைபெறும் சர்வதேச திரைப்பட விழாவில் இவ் ஆண்டுக்கானசிறந்த திரைப்படத்திற்கான விருதை 'தீபன்' என்ற திரைப்படம் பெற்றிருக்கிறது. இதில் 80 வீதம் தமிழ் மொழியே இடம்பெற்றுள்ளது. இதில் கதாநாயகனாக பாத்திரமேற்று நடித்திருந்த இலங்கைக் கலைஞர் ஷோபாசக்தி 'தங்கப்பனை' என்ற விருதை பெற்றிருந்தமை சர்வதேச ஊடகங்களில் மிகப் பிரபலமாக பேசப்பட்டு வருகின்ற ஒரு விடயம் இது நம் இலங்கைக்கு பெருமை சேர்க்கும் விடயம் இருப்பினும் நம் சொந்த பூமியில் இத்தகைய கலைஞர்கள் இல்லை என்பது வருத்தமளிக்கின் றது. ஈழத்தில் சிறந்த கலைப் படைப்புக்கள் உருவாகவில்லை என்று முற்றுமுழுதாக கூறமுடி யாது. பல சிறந்த படைப்புக்கள் தோற்றம் பெற்றபோதும் அவை உரியமுறையில் மக்களைச் சென்றடைவதில்லை.

ஈழத்தில் படைக்கப்பட்ட குறும் படங்கள் பல சர்வதேச விருதுகளைப் பெற்றுள்ளன. குறும்பட இயக்குநர் மதிசுதாவின் இயக்கத்தில் வெளிவந்த 'குறு வெட்டு' என்ற படம் அமெரிக்காவின் ஹிமாலயா கிரியேசனால் நடாத்தப்பட்ட சர்வதேச விழாவில் சிறந்த படத்துக்கான விருதைப் பெற்றுள்ளது. மேலும் இவரால் இயக்கப்பட்ட 'தாத்தா' என்ற குறும்படம் இலண்டன், கனடா போன்ற நாடுகளில் தேசிய விருதுகளைப் பெற்றுள்ளது. இவ்வாறு நம் ஈழத்துப் படைப்புக்கள் பல தேசிய விருதுகளைப் பெற்றுள்ளன. மேலும் இவ் ஆண்டு நம் படைப்பாளிகளின் முயற்சியில் ' மனசுக் குள் மழைச்சாரல்', 'யாழ்தேவி' போன்ற இன்னும் சில முழு நீளத்திரைப்படங்களின் இயக்கம் ஈழத்தில் முதன் முதலாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது.இது நம்பவர்களின் சாதனைப் பயணத்துக்கு அடித்தளமாக அமையும் இருப்பினும் நம்மவரில் இவ்விடயங்கள் எத்தனை பேருக்குத் தெரிந்திருக்குமோ தெரியாது.

நம்மால் நம் படைப்புக்களைப் பார்வையிடுவோர் எவ்வளவு பேர் என்றால் அவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களாக விளங்குவர். இது தொடர்பாக யாழ். பல்லைக்கழக மாணவர்கள் சிலரிடம் நீங்கள் எந்த சினிமாக்களை அதிகம் பார்வையிடுகிறீர்கள்? எனவும் நம் ஈழத்து சினிமாக்களைப் பார்வையிடுவதில்லையா? எனவும் கேட்டபோது -

இரண்டாம் வருட மாணவியாகிய கஜனா கூறுகையில் "நான் இந்திய சினிமாவினையே அதிகம் பார்வையிடுகிறேன். நம் நாட்டு சினிமா எந்த தொலைக் காட்சியில் ஒலிபரப்பப் படுகின்றன. அவர்கள் இந்தியாவில் வெளியிடுவதைப் போன்று முழு நீளத் திரைப்படங்களாக உருவாக்கி அவற்றை திரையரங்குகளில் வெளியீடு செய்தால் நாம் அவற்றைப் பார்வையிடலாம். அது மட்டுமல்லாது நம் சினிமாவில் கையாளும் மொழிநடையும் அவற்றை நான் பார்வையிடாமைக்குரிய ஒரு காரணமாகும்" எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும் இது தொடர்பாக இறுதி வருட மாணவனாகிய லக்ஸ்மணன் என்வர் கூறுகையில் "நான் இந்திய சினிமாவினையே அதிகம் பார்வையிடுகிறேன். அதேவேளை நம் ஈழத்து சினிமாக்கள் சிலவற்றையும் பார்க்கிறேன். இருப்பினும் இந்திய சினிமாவே எனக்கு பிடித்துள்ளது . இந்திய சினிமாவையே அதிகம் பார்த்து பழக்கப் பட்ட எனக்கு நம்மவரின் நடிப்புத் திறமை இந்திய நடிகர்களுடன் பார்க்கும் போது மிகக் குறைவாகவே உள்ளது. ஒரு படத்தில் நடிப்பவர்களின் நடிப்புத் திறமையே வாசகர்களை பார்க்கத் தூண்டுகிறது. சிறந்த கதைகளைக் கொண்டமைந்த படங்கள் பல வெளிவருகின்றபோதும் நடிப்புத் திறமையின் குறைபாட்டால் அவை நமக்குப் பிடிக்காமல் போகின்றது. மேலும் நமது தொழில்நுட்ப வளர்ச்சி இந்தியாவுடன் பார்க்கும் போது எவ்வளவு பின்தங்கிய நிலையில் உள்ளது. இவை போன்ற சில குறைபாடுகளே நாம் இந்திய சினிமாவை நாடக்காரணமாக அமைகிறது' எனக் குறிப்பிடுகின்றார்.


மதிசுதா - ஈழத்து குறும்பட இயக்குனர்

இது குறித்து நம் ஈழத்துக் குறும்பட இயக்குநர்களிடம் கருத்துக்கேட்டபோது குறும்பட இயக்குநர் மதிசுதா அவர்கள் கூறுகையில் "என்னுடைய பொதுப்படையான கருத்துப்படி நமது ஈழத்துப் படைப்புக்கள் இளைஞர்களைச்சரியான முறையில் சென்றடையாமைக்குரிய மிக முக்கிய காரணம் சரியான விளம்பரப்படுத்தல் இல்லாமையே ஆகும்.

முக்கியமாக இலங்கையைப் பொறுத்தவரையில் நம் படைப்புக்களுக்கான அங்கீகாரம் ஊடகங்களில் சரியாக வழங்கப்படவில்லை. இக் குற்றச்சாட்டை பொதுவாகத்தான் முன்வைக்க வேண்டும். ஏனென்றால் இளைஞர்கள் அதிகமாக இருப்பது சமூக வலைத்தளங்களில். எனவே நம் படைப்புக்கள் அவர்களை போய்ச்சேருகின்றன. இருப்பினும் அவர்களை கவரக்கூடிய படைப்புக்கள் என்று போய்ச்சேருவன. குறிப்பிட்ட அளவே ஆகும். சமூக வலைத்தளங்கள் எனும் போது அங்கு பல படைப்புக்களும் போய்ச் சேரும்போது அவனுக்கு எது பிடிக்கிறதோ அதனையே அவன் முன்னிலைப்படுத்துவான் எனவே இதை நாங்கள் ஒரு குற்றச்சாட்டாக முன்வைக்கமுடியாது. மேலும் சினிமாவில் மொழி என்றவுடன் இந்திய மொழியை கையாளமுற்படும்போது நமது சொந்த மொழியும் அல்லாமல் இரண்டுக்கும் இடைப்பட்டதொரு மொழிநடையை கையாள முற்படுவதால் யதார்த்தமில்லாத படமாக உருவாகின்றது. இதைவிடுத்து ஏதாவதொன்றை முழுமையாக கையாண்டாலே நம் படைப்புக்களும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படும்" எனக் குறிப்பிடுகின்றார்.

இவ்விடயம் குறித்து குறும்பட இயக்குனர் சிவலிங்கம் சிவராஜ் கூறுகையில், "பார்வையாளர்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது நம் இளைஞர்கள் இந்தியத் திரைப்படங்களைப் பல வருடங்களாகப் பார்வையிட்டு வருகின்றனர். இதனால் அவர்களின் இரசனை அதனை ஒட்டியதாகவே விளங்குகின்றது. இதனால் மொழிநடை மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றில் உள்ள குறைபாட்டால் ஈழப்படைப்புக்களை முழுமையாக அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. அனைத்துமே பார்வையாளர்களின் இரசனையிலேயே தங்கியுள்ளது. அவர்களின் இரசனைக் கேற்ப படைப்புக்களை கொடுக்க வேண்டுமெனில் இத்துறை ஒரு தனித் தொழில்த்துறையாக ஏற்றுக்கொள்ளப்பட


சி.சிவராஜ் - ஈழத்து குறும்பட இயக்குனர்

வேண்டும். சரியானமுதலீடு, சரியான விளம்பரப்படுத்தல் இல்லாமையும் நமது படைப்புக்கள் இளைஞர்களை சென்றடையாமைக்குரிய காரணமாகும்" எனக்குறிப்பிடுகின்றார்.

காலம் எவ்வளவோ மாறிக்கொண்டிருக்கிறது. அந்தக் காலகட்டத்தில் இளைஞர்கள் மிக வேகமாக பயணிக்கின்றனர். அவர்களின் இரசனை விருப்பு வெறுப்புக்களை அறிந்து தம்படைப்புக்களை உருவாக்கி அவர்களைத் தம்பவசப்படுத்துவது அவர்களின் கையிலேயே உள்ளது.. இவ்வருடத்தில் படிப்படியாக வளர்ந்துவரும் நம் படைப்பாளிகளை வளர்ப்பதில் ஊடகங்கள் தமது காத்திரமான தொழிலை செவ்வனே ஆற்ற வேண்டியது மிகமுக்கிய கடமையாகும்.




இருப்பினும் நம் கலையை கட்டிக்காப்பது நம் இளம் படைப்பாளர்களின் கையிலேயே தங்கியுள்ளது.

து.பிரசாந்தினி

Mayoora Communication
Allaiyampathi, Thunnalai,
Karaveddy.
TP/Fax : 021 226 3209
Hot Line : 0777805338
E-mail : Mayooran5@yahoo.com
Skype Id : allaimayura:com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை நாயகன் டுஷாந்திடம் ஒரு நேர்காணல்

**சோதனைகள் பலவற்றை சாதனைகளாக்கி பளுதூக்கல் போட்டியில் சிகரம் தொட்டிருக்கிறார். அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன் டுஷாந் . 2015 ஆம் ஆண்டு தேசிய மட்டப் பளுதூக்கல் போட்டியில் 17வயதுப் பிரிவில் கீழ் 85 - 94 கிலோ கிராமிற்கு இடைப்பட்ட பிரிவில் பங்கு பற்றி 170 கிலோகிராம் எடையைத் தூக்கி தங்கம் வென்றுள்ளார். இவர் பளுதூக்கல் போட்டியில் மட்டுமல்லாது குண்டு போடுதல் போட்டியிலும் தேசிய ரீதியில் பங்கு பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

**அச்சுவேலி மத்திய கல்லூரியில் 2015 ஆம் ஆண்டு கலைப்பிரிவில் கல்வி கற்றுவரும் டுஷாந் விளையாட்டில் மட்டுமல்ல தனது கல்வியிலும் சிறந்து விளங்குகிறார். தனது கா.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 7ABS சித்திகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமையும் சேர்த்துள்ளார். இதைவிட இவர் இந்த ஆண்டு மார்கழி மாதம் தேசிய ரீதியிலான பளுதூக்கல் போட்டியில் பங்குபெறுவதற்காக ஜப்பான் செல்ல இருக்கிறார். என்பது டுசாந்தின் இன்னொரு மைல்கல்.**

**கேள்வி : நீங்கள் எந்தப் பிரிவில் தங்கம் வென்றீர்கள்?**

பதில்: 2013 ஆம் ஆண்டு 17 வயதுப் பிரிவின் கீழ் தங்கம் வென்றுள் ளேன். 2015 ஆம் ஆண்டு 19 வயதுப்பிரிவின் கீழ் 85-94கிலோ கிராமிற்கு இடைப்பட்ட பிரிவில் பங்குபற்றி 170 கிலோகிராம் எடையைத் தூக்கி தங்கம் வென்றேன். இப்போட்டியில் என்னுடன் சேர்த்து எட்டுப் பேர் பங்குபற்றினார்கள். வடமாகாண்ம் சர்பாக இந்தப் பிரிவில் நான் மட்டுமே பங்குபற்றினேன்.

**கேள்வி: வேறு போட்டிகளில் பங்கு பற்றிய அனுபவம் உண்டா?**

பதில்: ஆம். 2012 ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் குண்டு போடுதலில் பங்குபற்றினேன். ஆனால் இடம் கிடைக்கவில்லை. ஆனால் பளுதூக்கலில் இதுதான் முதல் தடவையாக பங்குபற்றியுள்ளேன்.

**கேள்வி: இப் பளுதூக்கல் போட்டியில் உங்களுக்கு எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது?**

பதில்: எனது பாடசாலை அதிபரும் உடற்கல்வி ஆசிரியரும் எனக்கு அதிகமாக ஊக்கமளித்தனர் அத்துடன் நீ இப் போட்டிக்கான பயிற்சியில் ஈடுபட்டால் சாதிக்கலாம் அதற்குரிய உடல் அமைப்பு உள்ளது என அறிவுரை கூறி, என்னை துரையப்பாவில் அமைந்துள்ள பயிற்சி கூடத்திற்கு விதன் ஆசிரியரிடம் அனுப்பி வைத்தனர்.

அங்கு நான் சென்றபோது விதன் ஆசிரியர் என்னை வரவேற்று தேவையான ஆலோசனை களைக் கூறி நம்பிக்கையை ஏற்படுத்தினார். இதனால் எனக்கு இப்போட்டியில் பங்கு பற்ற வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது.



**கேள்வி: பயிற்சிகளை எந்த நேரங்களில் பெறுவீர்கள்?**

பதில்: எனது பயிற்சி யாளரான விதன் ஆசிரியர் உமக்கு எப்பொழுது நேரம் கிடைக்கிறதோ அந்த நேரம் வந்தால் நான் உங்களுக்கு பயிற்சி அளிப்பேன் எனக்கூறி இருந்தார். இதனால் நான் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலையிலும் ஏனைய நாட்களில் பாடசாலை முடிவடைந்ததும் மாலை நேரங்களில் சென்று எனது பயிற்சியை மேற்கொள்வேன்.

**கேள்வி: தங்கம் வெல்லுவீர்கள் என்ற நம்பிக்கை இருந்ததா?**

பதில்: நிச்சயமாக இருந்தது. காரணம் நான் ஏற்கனவே தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றி இருந்தேன். இதனால் எனக்கு பயம் இருக்கவில்லை. சிறந்த அனுபவமே இருந்தது. நான் போட்டிக்கு செல்லும் முன்னே பாடசாலையில் கூறிவிட்டுதான் சென்றேன் பதக்கத்துடன் தான் வருவேன் என்று. இதற்கு எனது பயிற்சியாளர் சிறந்த ஒத்துழைப்புக் கொடுத்தார்.

**கேள்வி: நீங்கள் வெற்றி பெற்றமைக்கு என்ன காரணம் என நினைக்கிறீர்கள்?**

பதில்: கடவுளிடம் நான் கொண்ட நம்பிக்கையே காரணமாக இருந்தது எனலாம். இதனைவிட எனது பயிற்சியாளரான விதன் ஆசிரியரின் சிறந்த ஒத்துழைப்பும் எனது பாட சாலையின் ஊக்கமும் காரணமாக அமைந்தன எனலாம்.

இதனைவிட எனது குடும்பத்தினரின் ஒத்துழைப்பும் எனது விடா முயற்சி யும் சோதனைகளை சாத்தனையாக்க துணை நின்றன எனலாம்.

**கேள்வி: எதிர்காலத்தில் பளுதூக்கல் போட்டிகளில் உங்களது நோக்கம் என்ன?**

பதில்: தேசிய மட்டத்துடன் மடடும் நின்றுவிடாமல் தொடர்ந்து தென் ஆசிய நாடுகளுக்கிடையிலான போட்டிகளிலும் மற்றும் ஒலிம்பிக் போட்டிகளிலும் பங்கு பற்ற வேண்டும் என விரும்புகிறேன்.

**கேள்வி: தற்கால இளைஞர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: கல்வியில் சிறப்பாக இருப்பதுடன் மட்டுமன்றி எமக்கு என்ன திறமை இருக்கிறதோ அத்துறையிலும் கவனம் செலுத்த வேண்டும். எனக்கு விளையாட்டுத் துறையில் ஈடுபாடு காணப்பட்டது. அதனால் என்னால் சாதிக்கமுடிந்தது. அதேபோல ஒவ்வொரு பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்கு நல்ல ஊக்கமும் உற்சாகமும் கொடுக்கவேண்டும் அப்போதுதான் வீட்டிற்கு மட்டுமன்றி நாட்டிற்கும் பெருமை தேடிக் கொடுக்க முடியும்.



**பா.ஜொய்சி**

# இளம் தொடர் விருது நாயகன்
## - சிவலிங்கம் சிவராஜ் -

**யாழ்ப்பாணத்தில் இளம் இயக்குனராக வலம்வந்து கொண்டிருக்கும் சி. சிவராஜ் தொடர்ந்து பல ஆண்டுகளாக விருதுகளைப் பெற்றுக்கொண்டே வருகின்றார். 2010 இல் உதயமான அவரது சினிமா வாழ்க்கை இன்றும் பிரகாசமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்த சர்வதேச திரைப்பட விழாவிலும்கூட தனது சிறந்த குறும்திரைப்படத்திற்கான விருதினைப் பெற்றுக் கொண்டுள்ளார்.**

**திருநெல்வேலி சைவத்தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைத் தொடங்கிய இவர் உயர்தரப் படிப்பை சென்ஜோன்ஸ் கல்லூரியில் பயின்றார். இவர் தனது மேற்படிப்பை எஸ்.ஆர்.எம். ஆட்ஸ் அன்ட் சயன்ஸ் கல்லூரியில் முடித்து விட்டுச் சினிமாத்துறையில் கால் பதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.**

**கேள்வி: நீங்கள் இதுவரை இயக்கிய குறும்படங்கள் பற்றி...?**

"ஊனம்" தான் எனது முதலாவது குறும்படம். மாற்றம், ஒரு அழைப்பு, சமனிலை, பை, அல்சர், பிகரை தியேட்டருக்கு கூட்டிட்டுப் போறது எப்படி?

**கேள்வி: இதில் விருது பெற்ற படங்கள் எவை?**



2010 இல ஊனம், AAA மூவிஸால் சிறந்த குறும்திரைப்படத்திற் கான விருது கிடைத்தது. 2011இல் மாற்றம். 2ஆம் இடம் கிடைத்தது. 2012இல் A Call என்ற பட த்திற்கு சிறந்த இயக்குநர், இசையமைப்பாளருக்கான விருது AAA மூவிஸால் வழங்கப்பட்டது. அதன் பின்னர் 2013இல் சமநிலை பெண்கள் அமைப்பில் முதலாம் இடம் கிடைத்ததோடு ஐரோப்பிய திரைப்பட விழாவிலும் திரையிடப்பட்டது.

2015 இல் அல்சர் - சிறந்த நடிகருக்கான விருது கிடைத்தது.

2015 பிகரை தியேட்டருக்கு கூட்டிட்டுப் போறது எப்படி என்ற படத்துக்கு AAA மூவிஸால் சிறந்த எடிற்றருக்கான விருது கிடைத்தது. அடுத்து தற்போது "பை" (Tha Bag) என்ற படத்திற்குச் சிறந்த குறும்திரைப்படம் என்கின்ற விருது இந்த ஆண்டு (2015) யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவில் கிடைத் துள்ளது. மேலும் 2014 ஆம் ஆண்டு நல்லூர்ப் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் சிறந்த நடிகருக்கான விருது கிடைத்தது. மேலும் நோர்வே திரைப்பட விழாவிற்கு உத்தியோக பூர்வ மாக தெரிவு செய்யப்பட்டுத் திரையிடப்பட்டது.

**கேள்வி: இந்தப் 'பை' திரைப்படத்தை எடுப்பதற்கான மூலகாரணம் என்ன?**

சமூக, கலாசார மாற்றத்தினைப் பற்றி யோசித்தேன். அந்த வேளையில் உதித்தது தான் இந்தத் திரைப்படம்.

**கேள்வி: நீங்கள் பொதுக் கருத்துடைய கதைகளைப் படமாக்குவதற்கான காரணம் என்ன?**

யாழ்ப்பாணத்திலிருந்து நிறைய குறும்படங்கள் வந்து கொண்டே இருக்கின்றது. அது இந்தியனின் பாணியிலேயே அதிகம் காணப்படுகின்றது. அந்தப் பண்பும் இருக்கத்தான் வேணும். ஆனாலும் எங்களுடைய பாரம்பரியம், எங்களுடைய வாழ்க்கை முறைகளைப் பிரதிபலிப்பதாக அமைந் தால் சிறப்பாக இருக்கும். அதைமையப் படுத்தியே எனது சிந்தனைகளும் திரைப்படங்களும் அமைகின்றது.

**கேள்வி: முழுநீளத் திரைப் படங்கள் எடுப்பதற்கான ஏற்பாடுகளில் தற்போது ஈடுபட்டுள்ளீர்களா?**

எல்லாக் குறும்பட இயக்குநர்களின் கனவும் இதுதான். இதற்கு நான் மட்டும் விதிவிலக்கல்ல. ஆனால் எடுத்தோம், கவுத்தோம் எண்டு இல்லாம நின்று நிதானமாக யோசித்து செயற்பட வேண்டியது கட்டாயமானதாகும். ஏனெனில் 2 மணித்தியாலங்கள் பார்வையாளரை வசப்படுத்துவதென்பது இலகுவான விடயமல்ல. அதற்கான படிகளை அமைக்கின்றேன். ஆயினும் இது நீண்டகால திட்டமாகவே அமையும்.

**கேள்வி: இத்துறையில் வளர்ந்து வரும் இளைஞர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**

கருத்துக் கூறுமளவிற்கு நான் இன்னும் வளரவில்லை.

**கேள்வி: பை குறும்படம் தொடர்பான உங்களுடைய அனுபவங்களைப் பகிர முடியுமா?**


ஆம் நிச்சயமாக.

வெயிலில் படப்பிடிப்பு ஆரம்பித்தது. இடையிலேவ மழை வந்தால் குழப்பநிலையில் இருந்த வேளையிலும் எனது சக நண்பர்களான கோபி, நிலுக்சன், சுலக்சன், விஜயரூபன் மற்றும் ஏனைய நடிகர்கள் மற்றும் உதவியாளர்களின் தலைமையில் அந்த மழைவிடும் இடைவேளைகளில் படப்பிடிப்புக்களை நிறைவு செய்தமை. இந்த வேளையில் அவர்கள் அனைவருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். அதற்காக இறைவனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**கேள்வி: நல்லது. இந்த விருதுகளைப் பெறுவதற்கான காரணமாக இருந்தவர்கள் யார்?**

நான்தான் என்று ஒருபோதும் கூறிவிடமாட்டேன். உண்மையிலேயே இந்த விருத்திற்கும் சரி, ஏனைய விருதுகளிற்கும் சரி, நான் தகுதியுடையவனோ என்று தெரியவில்லை. உண்மையிலேயே இந்த விருதுகள் கிடைப்பதற்கு என்னைவிட எனது உதவியாளர்கள், எனது நடிகர்கள், எனது இசையமைப்பாளர்கள், எனது ஆலோசகர்கள் எனப் பலருக்கான விருதாகத்தான் இவற்றைப் பார்க்கிறேனே தவிர இது எனக்கு மாத்திரமான விருதல்ல. இதற்குப் பாத்திரவான்கள் அவர்களே எனது அணியினருக்கே. இல்லை என் சகோதரர்களான அவர்களுக்கே இந்தப் பெருமை எல்லாம் உரித்துடையதாகும்.

**வி.சுலக்சன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் பெண்கள்

பிரபஞ்ச விதிகளின் அடிப்படையில் தமக்கே உரித்துடைய சிறப்பான இயல்புகளைக் கொண்டு அனைத்து உயிர்களிடமும் ஆண், பெண் என்ற வகைப்பாடு காணப்பட்டாலும் ஆற்றல்களின் அடிப்படையில் அவற்றை ஒருசேர நேர்தூக்கிப் பார்க்கினும் அவை இரண்டும் சமமே. ஆயினும் பெண்ணியம் நீண்ட காலமாகவே சடங்கு சம்பிரதாயம் சமயம், பண்பாடு, மரபு எனப் பல்வேறு கயிறுகளினால் கட்டப்பட்டு சமூக அடக்கு முறைக்கு உட்பட்டு ஓர் அடிமைத்தளமாக காட்டப்படுகிறது.

தற்போது இந்நிலை குறைவடைந்து காணப்படுகின்ற போதிலும் முற்றுமுழுதாக இல்லாமலும் இல்லை. இன்று பெண்ணிய அடக்குமுறைகள் தளர்த்தப்பட்டு அல்லது உடைக்கப்பட்டு பெண்கள், கல்வி, அறிவியல், தொழிநுட்பம், விளையாட்டு, சினிமா என அனைத்துத் துறைகளிலும் தம்மை ஆணுக்கு நிகராக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளனர். ஏன் போராட்டத்தில் கூட ஆயுதமேந்தி போராடும் போராளிகளாகினர்.

இத்தகைய வளர்ச்சிப்போக்கு பெண்களின் அரசியல்துறை, சார்ந்த அதிகாரங்கள், ஈடுபாடுகளில் மிகவும் குறைவான ஒரு போக்கிலேயே காணப்படுகிறது. அனைத்துத் துறைகளிலும் சாதிக்கத் துடிக்கும் இப்பெண்கள் அரசியல் துறையினுள் எத்தனிப்பது குறைவு. இலங்கை உட்பட இதுபோன்ற சில நாடுகளில் இத்தகைய நிலை கணிசமாகக் காணப்படுகின்றது. இத்தகைய நிலைகளை மாற்றியமைத்து அரசியலிலும் பெண்கள் ஆதிக்கம் செலுத்த வேண்டும். என்பதற்காக உலகளாவிய ரீதியில் பல்வேறு நிறுவனங்கள், பெண்களின் அமைப்புக்கள் போன்றன பல சட்ட திட்டங்களை உருவாக்கி அவற்றை அமுல்ப்படுத்தி வருகின்றன.

### சீடோ (CEEDO)

உதாரணமாக CEEDO சட்டம் Unscr 1325 ஆகிய திட்டங்களைக் குறிப்பிடலாம். அதனைவிட தற்போது இலங்கையில்



நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 30 வீதமான இளம் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டுமென மகளிர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பெண்கள் குழுவின் தலைவி சுவர்ணா சுமண சேகர சகல அரசியல் கட்சிகளிடமும் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலகிற்கு முதல் பெண்பிரதமரை அறிமுகம் செய்த நம் நாட்டில் இன்று பெண்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாகவே உள்ளதென்பது வேதனைக்குரிய விடயமாகும்.

### நாட்டின் யுத்த அரசியலில் பெண்கள்

முந்தய கால சூழ்நிலைகளில் காணப்பட்ட அரசியல் நிலவரங்கள், அச்சுறுத்தல்கள் என்பன பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் அரசியலில் கால்பதிக்க தயங்கிய கசப்பான நிலவரத்தில் நாடு காணப்பட்டது. ஆயினும் யுத்தம் மௌனித்தபின் பெண்கள் அரசியலில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி வருவதை அவதானிக்கலாம்.

ஒரு நாட்டின் வளர்ச்சியை அந்நாட்டின் பொருளாதார முன்னேற்றம் கல்வி அறிவு ஆகியனவே தீர்மானிக்கும் பெரும் சக்திகளாக விளங்குகின்றன. இவற்றில் பெரும்பங்கு பெண்களாலேயே நிறைவேற்றப்படுகின்றன. ஏனெனில் இன்று ஆண்களை விட பெண்களே கல்வியல் துறையிலும் சரி தொழில் வாய்ப்புக்களிலும் சரி கணிசமான செல்வாக்கினை ஏற்படுத்தி உள்ள தன்மையினை காணலாம். இவ்வாறு நாட்டின் வளர்ச்சிப் பாதைக்கு அச்சாணியாக இருக்கும் பெண்கள் அரசியலிலும் முதன்மை பெறுவார்களேயானால் நம் நாட்டின் அபரித வளர்ச்சியை யாராலும் தடுக்கமுடியாது.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கம் அமைப்பின் தலைவி விசாகதர்மதாச தற்கால அரசியலில் பெண்களின் பிரவேசம் பற்றிப்பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"இலங்கையில் பொதுவாக அரசியல் கட்சிகள், அமைப்புக்கள் பெண்களுக்கு சந்தர்ப்பம் வழங்காமையும் மற்றும் ஒப்பீட்டளவில் பெண்களுக்கு மக்கள் வாக்களிக்காமையே பெண்கள் அரசியலில் ஈடுபட தடையாக உள்ளதென குறிப்பிடுகிறார். மற்றும் பெண்கள் அரசியலில் தலைமைகளில் இருந்தால் இலஞ்ச ஊழல் அற்ற வன்முறையற்ற சுமூகமான சூழலை உருவாக்க முடியும்".

இவரின் கருத்துக்கு ஏற்புடையதாகவே 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற வடமாகாண சபைத் தேர்தலில் த.தே.கூட்டமைப்பில் போட்டியிட்டு அதிகமான விருப்பு வாக்குகளால் வெற்றி பெற்ற அனந்தி சசிதரன் தற்போது நடைபெற்ற பாராளுமன்றத் தேல்தலில் போட்டியிடுவதற்கு கட்சிகள் சந்தர்ப்பம் வழங்காமையால் அவர் சுயேட்சையாக போட்டியிட நினைத்து பின்பு வாபஸ் பெற்றுக்கொண்ட தன்மையினைக் குறிப்பிடலாம்.

இத்தகைய தடைகள் இல்லாதொழிக்கப்பட்டு பெண்களுக்கான அரசியல் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டு, பெண்கள் தாமாகவே முன்வந்து அரசியல் துறையினுள் பிரவேசிக்கும் சந்தர்ப்பத்தில் நம் நாடு சிறப்பானதொரு முன்னேற்றத்தை அடையும் என்பதில் ஐயமில்லை

கி. கபில்ராஜ்



SARASWATHY HALL
Proprietor
P.T.S.Shanmuganathan
Mobile:0779234176
Rajah Cream House
www.saraswathyhall.com
saraswathyhall_rajah@live.com
Tel: 021 320 7369, 021 222 1678
#37,Sir Pon.Ramanathan Road, jaffna
(Near narchimarkovil)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலில் கரைகண்ட மன்னார்

இந்துமா சமுத்திரத்தின் நித்திலமாகவும், நான்குபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள இலங்கைத் தீவில் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் தனித்துவமான பல்வேறுபட்ட விசேட அம்சங்களைக் கொண்டு மன்னார் மாவட்டம் திகழ்கின்றது. வளங்கள் என்ற வகையில் மீன்பிடி பொருளாதாரத்திற்கு சாதகமான பண்புகளைக் கொண்டு மன்னார் மாவட்டம் விளங்குகிறது. கடலோர அமைப்பு, வற்றுப் பெருக்கு நிகழ்வுகள், நீரோட்டங்கள் என்பன இத்துறை வளர்ச்சிக்கு அடிகோலாக அமைகின்றது இந்த வகையில் மன்னார் மாவட்ட ஜீவனோபாய தொழிலான மீன்பிடி பொருளாதாரமானது எதிர்நோக்கும் சவால்கள், பிரச்சினைகள் இதற்கான பரிந்துரைகள் தொடர்பாக இக்கட்டுரை அமைகின்றது.

மன்னார் வளைகுடாவானது தன்னைச் சுற்றி பணக்கார கிராமங்கள் சூழ அமைவு பெற்றுள்ளது. 36 மீன்பிடிக் கிராமங்களில் உள்ள 8052 குடும்பங்களின் சனத்தொகை 29506 ஆகும். இத்தொகையானது மன்னார் மாவட்டத்தின் சனத்தொகையின் 16 வீதம் ஆகும்.

இவ்வகையில் மன்னார் மாவட்டமானது சமூக, பொருளாதார, அரசியல், கலாசார மட்டத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. சமூக மட்டத்தில் வருமான மட்டத்தில்,. கல்வி மட்டத்தில், அபிவிருத்தி மட்டத்தில் வேறுபாடுகள் காணப்படுகிறது. இங்கு பல மதங்கள் காணப்படுகின்ற போதிலும் கிறிஸ்தவமே மூலமதமாகும். இவ்வாறு சமய வேறுபாடுகள் ஆண், பெண் சமத் துவமற்ற தன்மைகள், தொழில்ரீதியாக காணப்படும் வேறுபாடுகள் நிலவுகின்றது.

அரசியல் ரீதியாவும், பொருளாதாரரீதியாவும், கலாசார மட்டத்திலும் வேறுபட்ட நன்மைகள் காணப்படுகின்ற. இதில் சிறப்பாக மன்னார் வளைகுடாவின் ஜீவநாடியான மீன்பிடி பொருளாதாரமானது பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. இதில் அளவுக்கு மிஞ்சிய மீன்பிடி, பொருத்தமற்ற மீன்பிடிமுறைகள் அத்துமீறிய மீன்பிடி, கடல் மாசடைதல், குடும்பத் தொழிலென்று கல்வியை இடையில் நிறுத்தி சிறுவயதில் அதிகமானவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவது என்ற பல காரணங்களால் மன்னார் மாவட்ட மீன்பிடியானது பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது.

பொருத்தமற்ற மீன்பிடி, அளவுக்கு மிஞ்சிய மீன்பிடி எனும்போது சட்டத்திற்கு புறம்பான முறைகளினை பயன்படுத்தி கடல்வளங்களை கருவிலேயே இன அழிப்பு செய்யும் மீன்பிடி முறைகள் தீவிரமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உயிரினங்களின் இருப்புக்கும், அதன் நிலைபேற்றுத் தன்மைக்குரிய ஒருசவாலாக அமைந்துள்ளது. அதில் டைனமெட் அகல சிறகுவலை இழுவைப் படகுகள் மற்றும் கணவாய்பத்தை, தடை செய்யப்பட்ட தங்கூசிவலை, நைலோன் வலைகள் என்பன மூலம் அளவுக்கு அதிகமான அரிய வகையான உயிரினங்களான ஆவிரியா, திமிங்கலம், கடலாமை போன்ற சிறப்பான உயிரினங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் சிறிய பல மீன் குஞ்சுகள் கருவிலேயே அழிக்கப்பட்டு வருவதானால் எதிர்கால சந்ததியினருக்கான மீன்வளங்களின்இருப்பு வலுவாக குறைந்து விடும் மற்றும் இந் நாசகார மீன்பிடி முறைகளின் மூலம் கடல் சூழல் மாசடைதல். பௌதீக பொருளாதார சமூகரீதியில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுவது மட்டுமல்ல சிறு தொழிலாளர்களின் பொருளாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டு மீன் பிடிக்கப்பட்டுவரும் காலங்களில் கூட சில தொழிலாளர்களால் வருமானம் பெற்றுக் கொள்ளமுடியாத துர்ப்பாக்கி நிலை காணப்படுகின்றது.



அத்துமீறிய மீன்பிடி முறை எனும் போது உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளின் ஆதிக்கம் நிலவி வருகின்றது. மன்னார் வளைகுடாவில் சவுத்பார் என்ற இடத்தில் வந்து மீன்பிடிக்கும் இந்திய கடற் கொள்ளைக்காரர்கள் என அழைக்கப்படும் இந்திய மீனவர் பேசாலை கடற்பரப்பிற்குள் பலமிக்க ரோலர்களை வைத்துமீன்பிடித்து செல்வதும் மன்னார் மாவட்டமானது அதிகளவான மீன் வளங்கள் வேட்டையாடப் படுவதுடன் மட்டுமல்ல மன்னார் மாவட்ட மீன்பிடித் தொழிலாளர்கள் மீனின்றியே அதிகமானவர்கள் அதிகமான நேரங்களில் ஏமாற்றத்துடன் கரையொதுங்குகின்றனர். இதனால் இவ் மீனவ குடும்பங்களில் பொருளாததார குடும்பப் பிரச்சிகைள் தலைவிரித்து ஆடுகிறது. எனலாம்.

கடற் சூழல் மாசடைதல் எனும் போது மீன்பிடி நுணுக்கங்களில் சிலர் டைனமெட் நச்சுப் பொருட்களையும் பலமான இழுவைப் படகுகள் மூலம் முருகைக்கற் பாறைகள் அழிக்கப்படுகின்றது. அரிப்பு, வங்காலை, சிலாபத்துறையில் முருகைக் கற்பாறைகளே வேகமாக அழிவடைந்து வருகின்றது. அத்துடன் கடற் சூழலானது தூய்மையான நிலையினை இழந்து வருகின்றது.

அத்துடன் மன்னார் மாவட்டத்தை பொறுத்தவரையில் கண்டல் தாவரங்கள் அருவியாறு கழிமுகப்பிரதேசம் (அரிப்பு அச்சுக்குளம், வங்காலை கடனீர் ஏரி, விடத்தல் தீவு மற்றும் பறங்கியாறு, பாலியாறு போன்ற கழிமுகப் பிரதேசங்களில் மட்டுமே காணப்படுகின்றது. ஆனால் இவை கடந்த காலங்களிலும் தற்போதும் இப்பகுதிகளில் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றது. இத்தாவரங்கள் பல்வேறுபட்ட தேவைகளுக்காக அவை பற்றி அறிவின்றி அழிக்கப்பட்டு வருவதால் கரையோ சூழலுக்கு அச்சுறுத்தலாக உள்ளது.

அத்துடன் சமூகத்தில் குடும்பப் பின் னணியும் மீனவ தொழிலாளர்களுக்கான வருமானத்தை பல பிரச்சினைளால் பெற்றுக் கொள்ளாமல்போவதும், கடலுக்குச் சென்று பல மீனவர்கள் ஏமாற்றத்தோடு திரும்புவதும் இதனால் வீட்டில் மதுபானம் அருந்திப் பிரச்சினைகளில் ஈடுபடுவதும் பிள்ளைகள் பாடசாலைக் கல்வியைத் தொடரமுடியாமல் அவஸ்தைப்பவதும் சிறுவயதிலேயே மீன்பிடியை பற்றி பூரண அறிவின்றி மாணவர்கள் குடும்பத் தொழிலென்று மீன்பிடிக்கச்செல்வதும் மன்னார் மாவட்டத்தில் பல மீன்பிடித் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்கும் பாரியபிரச்சினையாகும்.

இப்பிரச்சினைகளை இல்லாதொழித்து மீனவர்கள் எல்லோரும் வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பொருத்தமற்ற முறைகளுக்குப் பதிலாக மற்றும் மீன்பிடி முறைகைளைக் கையாளுதல், தடை செய்யப்பட்ட மீன்படி உபகரணங்களை கைவிடுதல் அத்துமீறி மன்னார் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் யாராயிருந்தாலும் தண்டனை பெற்றுக்கொடுத்தல் மன்னார் மாவட்டத்தில் காணப்படும் கடல்வளங்களைப் பற்றிய பூரண வழிகாட்டல், எதிர்கால சந்ததிக்காக கடல் வளங்களைப் பாதுகாத்தல் முறையில் வெவ்வேறு வகையான மீன்சார்ந்த உற்பத்திகளை நிர்வாக முறையில் மேற் கொண்டு வேலை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல் வேண்டும்.

வளங்கள் என்பது அரியசொத்து. இயற்கையின் அற்புத கொடையாகும். இவ்வகையில் மன்னார் மாவட்டத்தின் அற்புதமான வளமான மீன்வளத்தினதும் இதன் பொருளாதார விருத்தியின் வளங்களை கையாளுகை செய்யப்படுவதிலேயே தங்கியுள்ளது. பல்வேறு வகையான பிரச்சினைகள் மன்னார் வளைகுடா எதிர்நோக்கும்போது மீன்பிடி பொருளாதாரமானது எதிர்நோக்கும் பிரச்சினையானது பாரிய பிரச்சினையாக உள்ளது. எனவே சரியான முறையில் சரியானமுறைகளை கையாளுகை செய்து வளங்களை திறம்பட முகாமை செய்வதிலேயே ஒரு நாட்டின் வெற்றி தங்கியுள்ளது

த.அருண்

# மன்னார் கிராமப்புற பாடசாலைகளின் தற்போதைய நிலை

பாடசாலைக்கல்வி என்பது ஒவ்வொரு மாணவர்களுக்கும் சரியான முறையில் வழங்கப்படவேண்டும். அப்போதுதான் அம் மாணவர்கள் சிறந்த புத்திஜீவிகளாக தலைசிறந்த கல்விமான்களாக எதிர்காலத்தில் சமூகத்தை சரியான பாதையில் இட்டுச் செல்லக்கூடிய தலைவர்களாக மாறுவார்கள். அந்தவகையில் இப்பாடசாலை கல்வியானது அனைத்து பிரதேச பாடசாலைகளுக்கும் சமனான முறையில் வளங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு கல்வி போதிக்கப்படுகிறதா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் காணப்படுகின்ற கிராமப்புறப் பாடசாலையை எடுத்து நோக்கும்போது போதிய வளங்கள் இல்லாத நிலையிலே நீண்ட காலமாக செயற்பட்டு வருகின்றன. இவ்வாறான சூழ்நிலையிலே மாணவர்கள். தமது கல்வியை மேற்கொள்கின்றனர். இவர்களுடைய கல்வி தொடர்ந்து கொண்டுசெல்ல முடியாத மாணவர்கள் இடையிலே பாடசாலை கல்வியைத் துறக்க நேரிடுகின்றுது. தமது பாடசாலையில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக அதிபர் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்.

இங்கு பிரிக்கப்படாத வகுப்பறைகளாகக் காணப்படுவதால் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் கடினமாகவே உள்ளது. வாசிகசாலை மற்றும் விளையாட்டு மைதானம் இன்மை குடிநீர் பிர்ச்சினை என்பன முக்கி பிர்சசினையாகவே உள்ளது அத்துடன் இப் பாடசாலையானது ஊர் வாசிகளின் தயவுடனே இயங்குகிறது.

எனினும் பாடசாலையில் திறமையான மாணவர்கள் காணப்படுகின்றனர். குறிப்பிட்ட சில பாடங்களுக்கான தகுதியான ஆசிரியர்கள் குறைவாக காணப்படுகிறன்றனர். கட்டட வசதிகள் மிகவும் குறைவாகவே உள்ளது தற்காலிக கட்டடங்களிலே பாடசாலை நடாத்தப்படுகின்றது. அதுவும் மழை காலங்களில் சிரமாகக உள்ளது.

இவ்வாறான பல குறைபாடுகளுடனேயே மன்னார் மாவட்டத்தின் கிராமப்புற பாடசாலைகள் இயங்குகின்றமை குறிப் பிடத்தக்கது. மேற்கூறிய இவ்வாறான அடிப்படை குறைபாடுகள் தீர்க்கப்படும் போதுதான் மாணவர்களின் கல்வி நிலை உயர்வடையும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது மன்னார் மாவட்ட கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர்களின் கல்வி மற்றும் விளையாட்டுத் திறமைகள் தொடர்பாகவும் அவர்கள் அது தொடர்பாக எதிர் கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் படசாலை அதிபர் பின்வருமாறு கூறுகிறார்.

எமது பாடசாலை மாணவர்கள் கல்வியிலும் சரி விளையாட்டுத் துறையிலும் சரி திறமை உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் அவற்றிற்கு சிலவளக்குறைபாடுகள் தடையாக உள்ளது. அவர்களின் விளையாட்டுத் திறமைகளுக்கு பயிற்சி மற்றும் களம் அமைத்துக் கொடுத்தல் என்பன உரியவர்கள் மேற்கொள்ளாமையால் அத்திறமைகள் வீணடிக்கப்படுகின்றன என்றுதான் சொல்லவேண்டும்.

திறமை வாய்ந்த மாணவர்கள் காணப்படும் மன்னார் கிராமப்புற பாடசாலைகளின் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் பட்சத்தில் தலை சிறந்த சமூகத்லைவர்களை உருவாக்கும் செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுக்க வாயப்பு உள்ளது. அத்தோடு கிராமப்புற மாணவர்கள் கல்வியை தத்தமது கிராமத்திலேயே உள்ள பாடசாலைகளில் சிரமமின்றிக் கற்றுத் தேற ஒவ்வொரு கிராமத்துமாணவர்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.



றாசீக் உனைஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா(ற்)றவும் வேண்டும்

இன்றைய உலகில் இளம் தலைமுறையினர் சற்று பிறள்வான பெயர்ரயே சமூகத்தில் வாங்கி வைத்துள்ளார்கள். இன்று காணப்படும் வேலையின்மை தவறான நண்பர்களின் சேர்க்கை, பெற்றேரர், பாதுகாவலரின் குடும்பப் பொறுப்பின்மை, அதிகமாக காண்படும் பணப்புழக்கம் காரணமாக இளைஞர்கள் சமூகத்தில் தவறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். இதனால் அவர்கள் தங்களுக்குத் தாங்களே கெட்ட பெயரை உருவாக்கிக் கொள்கின்றர்: போதைப் பொருள் பாவனையினால் இன்ற பல இளைஞர்கள் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

இன்று நாட்டில் களவு கொலை, பாலியல் துஸ்பிரயோகம் என தவறான செயற்பாடுகளே அதிகரித்துச் செல்கின்றுது. இதில் ஈடுபடும் அதிகளவிலான இளைஞர்கள் கல்வி கற்றோராகக் காணப்படுகின்றனர். காரணம் வேலையின்மையே ஆகும். இதற்கு எம் நாட்டு அரசியலில் காணப்படும் குறைபாடுகளும் ஓர் காரணமாகும். இன்று அரசியல் வியாபாரமாக மாறி பல இளைஞர்ளின் வாழ்வைப் பாதிததுள்ளது. குடும்பப் பொறுப்பற்ற இளைஞர்களே இத்தகைய சமூக சீர்கேட்டில் ஈடுபடுகின்றனர்.

ஆனால் இவை குறிப்பிட்ட அளவு தான் எல்லா இளைஞர்களும், இவ்வாறு இல்லை. மாறாக எத்தனையோ இளைஞர்கள் சமூகப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். தமக்கான மட்டும் வாழாது பிறருக்காகவும் வாழுகின்றார்கள் கழகங்கள், சங்கங்கள், நிறுவனங்கள் மூலமாக தனியாகவும், கூட்டாகவும் இணைத்து பல நற்பணிகள், அபிவிருத்தி செயற்பாடுளை மேற்கொண்டு வருகின்றனர். ஏழைகளுக்கான நிதி உதவி, அநாதை சிறுவர் முதியோருக்கான பராமரிப்பு வசதிகள், மாணவர்களுக்கான கல்வி வசதிகள், சமூகத்திற்கு நன்மை பயக்கும் வண்ணம் நூலகங்கள், விளையாட்டுக் கழகங்கள், இளைஞர் சங்கம், மாதர்சங்கம் என அமைத்துக் கொடுத்தல் பாடசாலை, சுகாதார நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்களுக்கு பணமாகவோ, பொருளாகவோ அல்லது வேறு உதவிகளையோ செய்து வருகின்றார்கள். பாடசாலை பல்கலைக்கழக மாணவர்கள் கூட்டாக இணைத்து பல்வேறு சமூகப் பணிகளை செய்து வருகின்றனர். எடுத்துக்காட்டாக அண்மையில் ஏற்பட்ட பதுளை, கொஸ்லத்தை பிரதேச மண்சரிவு அனர்த்தததால் பாதிக்ப்பட்ட மக்களுக்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் பல்லாயிர க்கணக்கான பண உதவிகளும், உணவு, உடை உட்பட அத்தியாவசிய பொருட்களும் சமூகத்தில் திரம்பட்ட வழங்கியமை குறி ப்பிடத்தக்கது.

மேலும் இலங்கைத் தமிழருக்கான பிரச்சினைகளுக்காகவும், மாணவி வித்தியாவின் கொலை சம்பந்தமாகவுமென இவ்வாறு பல பொதுப் பிரச்சினைகளுக்காக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைய சமுதாயத்தினர் கவனயீர்ப்புப் போராட்டங்கள் மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கனவே இவற்றைவிட மாணவர்களின் கல்வி வசதிக்கான நிதி உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற பல்வேறு பொதுப் பணிகளினை தற்கால இளைஞர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

நாவாந்துறையைச் சேர்ந்த வசந்தபாலன் நிக்ஷாந் (24) புனித பத்திரிசியார் கல்லூரியில் கா.பொ.த உயர்தரத்தில் கணித பாட நெறியைக் கற்றிருந்த போதும் இவர் கைதடி சிறுவர் காப்பகத்தில் ஒரு சிறுவனைப் பொறுப்பெடுத்துள்ளார். இவர் யாழ்.மறைக் கல்வி நடுநிலையத்தோடு இணைந்தும், தனியாகவும் பல சேவைகளைப் புரிந்து வருகின்றார். மறை மாவட் யாழ். கத்தோலிக்க நிலைய இளையோர் ஒன்றியத் தலைவராக உள்ள இவர் தன் கல்வித் தகுதியை பொருட்படுத்தாது எந்த வேலையையும் செய்யத் தயாராக உள்ளார். இவரது பிரதான வேலை கலை சம்பந்தமானதாகும். இவர் பணம் நிலையானதல்ல அதனால் என்னால் முடிந்த உதவியை ஏனையோருக்கு செய்வேனென்று கூறியுள்ளார்.

மேலும் இவர் ஏனைய இளையோருடன் இணைந்து மக்களுக்குப் பல விழிப் புணர்வுகளை ஏற்படுத்தி வருகிறார். எடுத்துக்காட்டாக தெருக்கூத்துக்கள், பாடசாலைகளில் சென்று விழிப்புணர்வு நாடகங்களை அரங்கேற்றல் போன்றனவாகும். எதிர்வரும் தை மாதத்திலிருந்து மேலும் சிலருடன் இணைந்து மேலும் சில மாணவர்களுக்கு கல்விக்கான உதவிகளை வழங்க இருப்பதாகவும் திட்டம் வகுத்துள்ளார்.

இவ்வாறு இன்னும் எத்தனையோ இளைஞர்கள் பல்வேறுபட்ட சமூக சேவைகளினை தம்மால் முடிந்தளவு செய்து வருகின்றனர். இரத்ததானம் வழங்குதல், பொதுக் குளங்களை புனரமைத்தல், விளையாட்டுக் கழகங்களுடாக சிறுவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்கி ஊக்குவித்தல், சிரமதானப் பணி என குழுவாக கழக இளைஞர்கள் இணைந்து பல்வேறுபட்ட செயற்பாடுகளில் ஈடுபடுகின்றர் இன்றைய இளைஞர்கள் போதைப் பொருட்களினை சினிமா போன்ற காரணங்களாலேயே தவறான பாதையை தெரிவு செய்கின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும். சமூகத்தில் எடுததுக்காட்டாகத் திகழவேண்டும் இளைஞர்கள் நினைத்தால் எதையும் சாதிக்கலாம் எம் நாடு எம் சமூகம் என்ற எண்ணம் வளர வேண்டும் நாட்டின் வளமான முன்னேற்றத்திற்கு மேலும் பல சமூக நற்பணிகளை செய்ய முன்வரவேண்டும். தமக்கென வாழாது பிறருக்கும் தம் உழைப்பின் ஒரு பங்கை ஒதுக்க வேண்டும் முயற்சித்தால் முடியாததென்று ஒன்றுமே இல்லை.



ப.கௌசிகன்


# கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம்பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை)

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Regd No.DS/589



## வவுனியாவில்...

பெண்களுக்கு பெண் பயிற்றுவிப்பாளர்களால் பயிற்சி வழங்கப்படும்

இல. 216, ஏ9 வீதி, வவுனியா. (வசந்தி தியேட்டருக்கு முன்பாக)
024 222 7777, 077 710 0444

- தவணை முறைக் கட்டணம்.
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- விரைவில் எழுத்துப்பரீட்சைக்கு ஒழுங்கு செய்யப்படும்.
- கனரக வாகனம் (AD) பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி.
- எழுத, வாசிக்க தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு.
- இரவு நேர வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- ஓடத் தெரிந்தவர்களுக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் பெற ஒழுங்கு செய்யப்படும்.
- அரச, தனியார் ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சியை மேற்கொள்ள முடியும்.



| | |
|---|---|
| பருத்தித்துறை | : 021 492 3201, 071 454 6958 |
| சாவகச்சேரி | : 021 492 3202, 021 227 0700 |
| சுன்னாகம் | : 021 224 2022, 071 454 6956 |
| விசுவமடு | : 021 320 1515, 071 454 6955 |
| கிளிநொச்சி | : 021 228 5505, 071 454 6955 |
| நெல்லியடி | : 021 300 6550, 071 454 6957 |
| யாழ். கச்சேரி அருகில் | : 076 722 5292, |
| மன்னார் | : 023 225 1656, 077 847 2717 |






தொ.பேசி: 021 222 4353, 021 492 3200, 0777 225292


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திப்போர் செயற்படுவீர் !

யாழ். நகரின் மத்தியில்: புறக்கணிக்கப்படும் அறிவித்தல்



யாழ். பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் ...



வடமராட்சி கிழக்கு: புறக்கணிக்கப்படும் அறிவித்தல்



## பல்கலைக்கழக நிகழ்வுகள் சில ...

சிரேஷ்ட ஊடகவியலாளர் S.M. கோபாலரத்தினம் அவர்களின்கௌரவிப்பு



ஊடகக் கற்கைகள் அலகின் ஆசிரியர் தினம் 2015



ஊடகக் கற்கை மாணவர்களின் சரஸ்வதி பூஜை 2015





ஊடகக் கற்கைகள் மாணவர்களின் பால்நிலை சஞ்சிகையான விசைச்சிறகுகள் சஞ்சிகை வெளியீடு 2015

ஊடகக் கற்கைகள் மாணவர்களின் "மைத்தூறல்" வெளியீடு 2015







உளவியல்துறை மாணவர்களின் உளவியல் கண்காட்சி 2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்கலையனுள் தடம்பதித்த
ஊடகக் கற்கைகள் மாணவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org